# ருத்ரா

நொவெம்பர் - டிசெம்பர் 2002 தேடல் 14 விலை ரூபா 5.00

## பூங்கொத்தை அங்கே வையுங்கள்.............................

அயல் நாட்டுத் தூதுக் குழுவொன்று
ஒரு நாட்டுக்குச் செல்லும்போது
அடையாளமற்ற வீரனின் சமாதியில்
வைப்பதற்காக
பூங்கொத்தை எடுத்துச் செல்வார்கள்

நாளை ஒரு வெளிநாட்டுத் தூதுக்குழு
குர்திஸ்தானுக்கு வந்து என்னிடம்
கேட்கலாம்
அடையாளமற்ற வீரனின் சமாதி எங்கே?

அப்போது நான் அவர்களுக்குச் சொல்வேன்
ஐயா ~
இந்த தேசத்தின் ஒவ்வொரு ஆற்றின்
கரையிலும்
ஒவ்வொரு மசூதியின் முன் திண்ணையிலும்
ஒவ்வொரு தேவாலயக் கதவின் முன்பும்
ஒவ்வொரு குகையிலும்
குன்றுகளின் ஒவ்வொரு கல்லிலும்
தோட்டத்தின் எந்த மரத்தின் மீதும்
பூமியின் ஒவ்வொரு அடி மண்ணிலும்
ஆகாயத்தின் கீழ்
ஒவ்வொரு அடி இடை வெளியிலும்



நீங்கள் பயப்படத் தேவையில்லை
ஐயா ~
நீங்கள் நிற்கும் இடத்திலிருந்து
கொஞ்சம் குனியுங்கள்
உங்களது பூங்கொத்தை அங்கே வையுங்கள்
போதும் ~

- அப்துல்லா பெஸி -

நன்றி
(மலைகளைத் தவிரவும் எமக்கு நண்பர்கள் இல்லை
சமகால குர்திஸ் கவிதைகள)

"மனிதத்தின் இருப்பைத் தேட"

# ஆத்ம தரிசனம்

## ஓய்ந்த போரும் ஓயாத போராட்டமும்

● போர் ஓய்ந்துள்ளது. சமாதானம் பற்றிய கனவுகளோடு நாட்கள் கரைந்து போகின்றன. ஓய்ந்தது எது ஓயக் கூடாதது எது என்ற தெளிவற்று 'வியாபாரச் சந்தடிக்குள்' வினாக்கள் புதைந்து போக தீக்கோழிகளாய் எம் வாழ்வு நகர்கிறது.

தமிழ் மக்கள் தமது மானுட கௌரவ வாழ்தலுக்காக முன்னெடுத்தது தான் தமிழர் விடுதலைப் போராட்டம். ஒடுக்கு முறையின் கனதி காரணமாக அது ஒரு கட்டத்தில் ஆயுதப் போராக உருவெடுத்தது. இன்று ஓய்ந்திருப்பது இந்த ஆயுதப் போர்தான். ஆனால் தமிழ் மக்கள் தமது கௌரவமான மானுட வாழ்வுக்காக முன்னெடுக்கும் போராட்டமோ ஓயாதது, ஓயக் கூடாதது. தன் இயல்பிலே அது ஓய முடியாதது. கௌரவமான வாழ்தல் என்பது மாயமானாய் முன்நோக்கி நகரும் தன்மையது. ஆகவே விடாமல் தொடரப்பட வேண்டியது. தற்கால நிலைபற்றிய தொடர் அதிருப்தியும், மேம்பாட்டுக்கான தொடர் அவாவுமே வரலாற்றுச் சுழற்சியில் நாம் முன்செல்லுதற்கான உந்துசக்திகள்.

ஓய்ந்த போரும் சமாதான முயற்சிகளும் தடைகளைத் தாண்டி நியாயமான தீர்வு என்ற எல்லைக் கோட்டை ஒரு வேளை எட்டினாலும் மானுட மேம்பாட்டிற்கான போராட்டம் தொடர்ந்தும் தொடரப்பட வேண்டிய தேவை இருக்கிறது. போர்க் காலத்தில் இதன் திசை தெளிந்த வானத்து நட்சத்திரங்களாக துலக்கமாகத் தெரிந்தது. ஆனால் 'சமாதானச் சூழல்' பெற்றெடுக்கும் வெளிவேட அலங்கார மேகங்களால் அதன் திசையும் தேவையும் தெளிவற்றுப் போகலாம். எனவே தனித்து போராட்ட வடிவத்தால் மட்டுமல்ல 'முழுமனித விடுதலைக்கான வாழ்வுப் போக்காலும்' உலகத்தின் ஏனைய ஒடுக்கு முறைகளுக்கு எதிராகப் போராடும் மக்களுக்கும் முன்னுதாரணமாக அமைய வேண்டிய தேவையும் அவசியமும் நம் எல்லோருக்கும் உரியது. இலக்குகளை மீள்விசாரணை செய்துகொள்வோம். விழிப்புடன் இருப்போம்.

● மானுடத்தின் தமிழ் கூடல் - 2002 வரலாற்றுப் பதிவுக்குரிய நிகழ்வாகக் கடந்து சென்றிருக்கிறது. சுமார் கால் நூற்றாண்டுக்கு முன்னான தமிழாராய்ச்சி மாநாட்டில் நடந்த அவலங்களோடு ஒப்புநோக்கி பெருமை கொள்ளத்தக்க தமிழ் எழுச்சி நிகழ்வாக இது அமைந்திருந்தது. பல கலை இலக்கிய நண்பர்கள் ஒருவர் ஒருவரை மீளச் சந்திக்க, புதிதாய் பலர் பலருக்கு அறிமுகமாக களம் அமைத்த ஒரு ஒன்றுகூடலாய் காணப்பட்டது. அதன் அகலிப்பு ஆழங்களை எட்டுவதற்கான சாத்தியங்களைக் குறைத்திருந்தாலும் எதிர்கால முன்னெடுப்புகளுக்கு ஒரு முன்னோடியாய் அமைந்திருந்தது. கலை இலக்கியகாரருக்கு புதுவேகமும் திசையும் கிட்டுமென நம்புவோம்.

● இது கார்த்திகை மாதம். மக்கள் கரங்களில் மலரேந்தி கனத்த இதயங்களோடு கல்லறைகளை நெருங்கும் காலம். தமிழ் மக்களின் உரிமை வாழ்வுக்காய் தம்மை அர்ப்பணித்த எல்லோருக்கும் 'ஆத்மா' ஆத்மார்த்தமாக வணக்கம் செலுத்திக் கொள்கிறது.

- ஆசிரியர் குழு -

# மாற்றுத் தளங்களை வேண்டி நிற்கும் மனித உரிமைகள்

இன்றைய உலகில் அதிகம் பேசப்படும் விடயமாகவும் மறுபுறம் அதிகம் மீறப்படும் ஒன்றாகவும் மனித உரிமைகள் மாறி இருக்கின்றன. மனித உரிமைகள் என்று பேசப்படும் வேளைகளில் முன்னுக்கு வருபவை ஜெனிவா மனித உரிமைப் பிரகடனமும், போராட்டக் குழுக்களும் ஆகும். ஆனால் உண்மை என்ன?




மூன்றாம் உலக நாடுகளில் இன்று அதிகளவில் மனித உரிமை மீறல்கள் நடைபெறக் காரணமாய் இருக்கும் அமெரிக்கா முதலான முதலாம் உலக நாடுகளே மனித உரிமைகள் பற்றி அதிகளவில் பிரசங்கித்து வருகின்றன. இவை அப்பாவி மக்களை அழிக்க ஆயுதம் மற்றும் ஏனைய உதவிகளை வழங்கிக் கொண்டே உரிமைகள் பற்றி கூப்பாடு போடுவது இந்தக் காலத்துக்கேயுரிய 'முரண்நகை' ஆகும். மேற்குலகம் சார்ந்த பெரும்பாலான சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களும் (I.N.G.O.s) மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் செயற்திட்ட உதவி பெறும் உள்ளூர் அமைப்புகளும் சிறுவர் உரிமைகள், மனித உரிமைகள் புத்தகங்களை வெளியிட்டு, தமது கடமையை 'நேர்மையாகச்' செய்வதை இவ்வேளை இங்கே சுட்டுவது பொருத்தமானதாகும்.

பொருளாதாரத்தடை போன்ற பல்வேறு ஒடுக்கு முறைகளில் அரச இயந்திரத்துக்கு முண்டு கொடுத்துக் கொண்டே அத்தகைய அசாதாரண சூழ்நிலை நெருக்கீட்டால் போர்ச் சூழலுக்கு தள்ளப்படும் சிறுவர்களை போரில் ஈடுபடுத்தக் கூடாது என்று அறிக்கை விடுவதிலேயே மேலைத் தேசங்கள் வல்லவை. எது சிறுவர்களுக்கு நன்மை பயக்கும்? இத்தகைய அறிக்கைகளா, அல்லது போரற்ற நிலையான உரிமையுள்ள வாழ்வுச் சூழலை அவர்களுடைய சமூகத்துக்கு ஏற்படுத்திக் கொடுப்பதா?

இத்தகைய முரண்கள் தற்போதைய மனித உரிமைகள் நிறுத்தப்பட்டிருக்கும் பல்வேறு தளங்களை மீள் விசாரணைக்கு உட்படுத்தவும், மாற்றுத் தளங்களைத் தேடவும் எம்மை தூண்டுகின்றன.

முழு உலகிற்கும் பொதுவானவை என்று நேற்றுவரை கருதப்பட்ட ஐ.நா. மனித உரிமை வரைபுகள் உண்மையில் மேலைத்தேய கருத்தியல் மற்றும் வாழ்வியல் அனுபவத்தின் குழந்தை. அதனை முழு உலகிற்கும் கேள்விகள் இன்றி சாட்டுதல் செய்ய முடியாது என்கின்ற விமர்சனங்கள் தற்போது முன்வைக்கப்படுகின்றன. பூகோள மயமாக்கல் மூலம் முழு உலகையும் தனது இரும்புக் கரங்களால் பிழிந்து டொலர்களாக மாற்ற முயலும் சக்திகளின் கைகளில் மனித உரிமைகள் இன்று இலகு கருவியாக கிடைத்திருக்கின்றன என்பதே உண்மை நிலைமையாகும். ●

**(டிசம்பர் 10- மனித உரிமைகள் தினம்)**

- சந்திரன் -

# தாகத்துக்கு மரணம்......?

எமது தாகத்தைத் தணிக்க எத்தனை விதமான பானங்கள் இன்று அடுக்கடுக்காக காட்சிப்படுத்தப்படுகின்றன. உண்மையிலேயே இவற்றின் நிறமும் அழகும் பெயர்களும் எம்மைக் கவரத்தான் செய்கின்றன. அத்துடன் தடையற்ற பாதையூடாக இவை பரவும் வேகமும் அதிகமாதலால் இவற்றைப் பருகுவோர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

அமெரிக்காவின் பிரதான நிறுவனங்களுள் **கொக்கோக்கோலா, பெப்சி** ஆகிய இரு நிறுவனங்கள் முக்கியமானவையாகும். இவையிரண்டும் ஏட்டிக்குப் போட்டியாக தமது மென்பானங்களைத் தயாரித்து வருகின்றன. இவைகள் இலாபம் என்பதையே குறிக்கோளாகக் கொண்டு தமது உற்பத்திகளை உலகம் முழுவதும் பரப்பி வருகின்றன.


இப்பானங்களில் விட்டமின்களோ, உயிர்ச்சத்துக்களோ இல்லை.

அதிக சீனியும் சில அசிட்வகைகளும் நீண்ட காலம் பாதுகாக்கப் பயன் படுத்தப்படும் பொருட்களும் நிறங்களும் மட்டுமல்ல சாதாரணமாக வைத்தியர்கள் விழுங்கவே வேண்டாம் என எச்சரிக்கும் காபன்டையொக்சைட் நுரை வடிவில் எமக்குத் தரப்படுகின்றது.

பல்வேறு நிறங்களில், பல்வேறு வடிவங்களில் சிந்தை கவரும் விளம்பரங்கள் மூலம் உலகம் முழுவதும் விற்கப்படுவது தாகம் தீர்க்கும் பானமல்ல. நச்சுப் பானங்களே. இதனால் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு கோடிக்கணக்கான வருவாயும் ஏழை எங்களுக்கு கொடிய நோய்களுமே சொந்தமாகின்றன.

விளம்பரங்களினாலும் கவர்ச்சிகளாலும் ஈர்க்கப்பட்டு ஏதோ தாகத்திற்கு குடித்தால் சரி என்று பருகும் பானத்தினாலேயே மனிதசாரம் உறிஞ்சப்படுவது என்பது எம்மைப் போன்ற வறுமைக் கோட்டுக்குள் வாழும் ஆசிய நாடுகளுக்குத் தெரியாது. வியர்வை சிந்தி உழைக்கும் பணத்தை கொக்கோக்கோலா, பெப்சி முதலாளிகளுக்கு கொடுத்து நோயையும் பெற்றுக் கொள்கிறோம்.

- சிறுநீரக பாதிப்புக் காரணமாக இளம்தாயொருவர் இறக்க நேரிட்டது. இவரது நோயின் காரணத்தை ஆராய்ந்த போது அவர் மதிய உணவின் போது தினமும் ஒரு கிளாஸ் குளிர்பானம் அருந்தி வந்தமையே இந்நோய்க்கான காரணம் என்று வைத்தியர்கள் கூறினர்.
- அதிகமாக கொக்கோக்கோலா பருகுவது யார் என்பதை அறிவதற்காக இந்தியாவின் புதுடில்லி பல்கலைக்கழகத்தில் ஒரு போட்டி நடாத்தப்பட்டது. அனைவரும் வியக்கும்படி 8 போத்தல் கொக்கோக்கோலாவை குடித்த ஒருவர் அந்த இடத்திலேயே இறந்தார். இரத்தத்தில் காபனீரொக்சைட் அதிகரித்து, ஒக்சிஜன் அதிகம் குறைந்ததே இவரது மரணத்துக்கான காரணம் என அறியப்பட்டது. அன்றிலிருந்து பல்கலைக்கழகச் சிற்றுண்டிச் சாலையில் எல்லாவகையான குளிர்பான விற்பனையும் தடை செய்யப்பட்டது.
- மலசல கூடத்தில் இதனை ஊற்றி ஒரு மணித்தியாலத்தின் பின் கழுவினால் கறைகள் அகன்று விடும். கறைகளை அகற்றக் கூடிய காரம்மிக்க அசிட் தன்மை இதில் உண்டு.
- உங்கள் ஆடைகளில், வாகனங்களில் படிந்த கிறீஸ் கறையை அகற்ற கொக்கோக்கோலா உபயோகியுங்கள்.
- இரும்புக்கறை மற்றும் ஏனைய கறைகளை அகற்ற அலுமினியக் கடதாசியை இப்பானத்தில் அமிழ்த்தி வைத்து உபயோகித்துப் பாருங்கள்-




- திருகிக் கழற்ற முடியாமல் உள்ள வற்றுக்கு துணித்துண்டை கொக்கோக் கோலாவில் நனைத்து, அந்த இடத்தில் சுற்றி விடுங்கள். சிறிது நேரத்தின் பின்னர் சுற்றிய துணித்துண்டை எடுத்துவிட்டு திருகிப் பாருங்கள்.
- வாகனங்களின் கண்ணாடியை சுத்தமாக்க கொக்கோக்கோலாவை உபயோகித்துப் பாருங்கள். பளிச்சிடும் தன்மையைக் காண்பீர்கள்.
- ஒருவர் தம்முடைய உடைந்த பல்லை பெப்சி கோலாவில் போட்டு வைத்தார். சில நாட்களின் பின்னர் தனது பல்லைக் காணவில்லையாம். அது கரைந்து விட்டது. மனிதன் இறந்து அடக்கம் பண்ணப்பட்டு பல வருடங்களானாலும் சிதையாத பல்லை இல்லாமல் செய்யக்கூடிய அசிட்தன்மை இவற்றுக்கு உண்டு
- இப்பானங்களைக் குடிப்பதால் எமது உடம்பின் எலும்புகள் கரைகின்றன. பற்கள் சிதைகின்றன. சிறுநீரகம் பாதிப்படைகிறது. உணவு ஜீரணிப்பதைக் குறைக்கின்றது. உணவு ஜீரணிக்காமல் வயிற்றில் இருப்பதால் நச்சுத்தன்மைகள் உண்டாகி இரத்தத்தோடு கலப்பதால் பல்வேறு நோய்கள் உண்டாகின்றன.

மேற்படி மனித உயிர்களைக் காவு கொள்ளும், அழிக்கும் கொக்கோக்கோலா, பெப்சி போன்ற பானங்கள் பற்றிய ஆய்வை சர்வதேச அரச சார்பற்ற நிறுவனமான 'ஒக்ஸ்பாம்' என்ற அமைப்பு மேற்கொண்டது. இவ் ஆய்வு பற்றிய தகவல்களை 'சந்தேசிய' எனும் பத்திரிகை சிங்களத்தில் மொழிமாற்றம் செய்தது. மேலும் இவைபற்றிய தகவல்களை கொழும்பிலிருந்து வெளிவரும் 'ஒளியை நோக்கி' எனும் பத்திரிகையும் அண்மையில் வெளியிட்டது.

ஆங்கில பத்திரிகை ஒன்று உலக இயற்கை அதிசயங்களுள் ஒன்றான இமய மலையிலேயே இக் கம்பனிகள் தமது கைவரிசையைக் காட்டிய தகவல்தனைக் கூறுகிறது. இதன்படி சூழலியல் மலைப்பகுதியான இமாலய மலைத் தொடர்களில் கொக்கோக்கோலா, பெப்சி ஆகிய இரு பிரதான பெரிய கம்பனிகளும் இவைபோன்ற ஏனைய 10 கம்பனிகளும் எவ்வித அனுமதியுமின்றி தமது கம்பனி விளம்பரங்களுக்காக இவ் மலைத் தொடரில் தாம் சார்ந்த படங்களை வரைந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவற்றின் வணிக நடவடிக்கைகள் ஆக்கிரமிப்பு நடவடிக்கை களாக மாறி வருவதையே இது காட்டி நிற்கிறது.

பொருளாதாரத் தடை நிலவிய காலங்களில் உள்ளூர் உற்பத்தி, சுயதொழில் முயற்சிகளில் 'தெளிவான' இலக்குடன் ஈடுபட்ட நாம், இன்று தாகத்துக்கு நஞ்சை அருந்துவதோடு சுரண்டல் நிறுவனங்களுக்கு முதுகு சொறியவும் தொடங்கிவிட்டோம். மட்டக்களப்பிலிருந்து உள்ளூர் வளங்களின் பயன்பாடு, நுகர்வு என்பவற்றை மையப்படுத்தி வெளியாகும் 'மூன்றாவது கண்' ஆசிரியர் தலையங்கத்தில் இடம் பெற்ற விடயத்தை இங்கே நினைவுபடுத்துவது பொருந்தமானது. **போத்தலில் குடிநீர் வாங்கிக் குடிக்கும்காலம் வந்து விட்டது. சிலிண்டரில் காற்றை வாங்கிச் சுவாசிக்கும் காலம் வரவேண்டாம்.**

**தேசியமும் தோடையும் குளிர்ச்சியான பழவகைகளும் எம் மண்ணில் விளைந்து நின்று தாகம் தீர்த்ததை 'சமாதானச் சூழலில்'** மறக்காது இருப்போம். ●

க. அருந்தா

### வெறியாட்டம், பானம், வருமானம்

- கொக்கோக்கோலாவால் 2000 ஆண்டில் முதல் 4 மாத இலாபம் 5000 கோடி ரூபா
- பெப்சியின் சொத்து மதிப்பீடு ஒரு இலட்சம் கோடி ரூபா.
- உலக குளிர்பானச் சந்தையில் 46 வீதத்தை கொக்கோக்கோலாவும் 21 வீதத்தை பெப்சியும் இடம்பிடித்துள்ளன.
- அமெரிக்க கொக்கோக்கோலா நிறுவனங்களில் தொழிற்சங்க நடவடிக் கைகளில் ஈடுபடும் தொழிலாளர்கள் கடத்தப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்படுகின்றனர். இதற்கு குண்டர் படையும் அமெரிக்க இராணுவத் தினரும் உதவி வருகின்றனர் என்ற தகவல்கள் அண்மையில் வெளிவரத் தொடங்கியுள்ளன.
- இலங்கையில் இவ் உற்பத்தியில் ஈடுபடும் தொழிலாளர்கள் முன்னறிவித்தலின்றி வேலையிலிருந்து நீக்கப்படல், நிவாரணம் மறுக்கப்படல், நலன்கள் மறுக்கப்படல் போன்றவற்றை எதிர்கொள்கின்றனர். தொழிலாளர்களின் இரத்தத்தாலும் வியர்வையாலும் பெரும் இலாபமீட்டி நிற்கும் கொக்கோக் கோலா பானத்தில் தொழிற்சங்க தலைவர்களின் இரத்தமும் கலந்து இருக்கிறது. அதையே நாங்கள் அருந்தியும் வருகிறோம்.

# பொதுப்புத்தி அவமதிக்கப்படுவதை

குருநகரைச் சேர்ந்த அ. யேசுராசா, தமிழ் இலக்கியச் சூழலில் நன்கு அறியப்பட்டவர். 1975–1990 வரை வெளிவந்த அலை என்னும் கலை இலக்கிய சிற்றிதழின் ஆசிரியர் குழுவிலும் பின்னர் ஆசிரியராகவும் இருந்தவர்; இவ்விதழின் கனதியான தாக்கம் பற்றி நாம் அனைவரும் அறிவோம். இளங்கவிஞர்களுக்கான 'கவிதை' இதழையும் வெளியிட்டார்.

படைப்பு சார் பணிகளோடு, விமர்சனத்துறையிலும் இவரது பணி முக்கியமானது. இவரது படைப்புக்கள் நூல் வடிவிலும் வெளிவந்துள்ளன. தொலைவும் இருப்பும் ஏனைய கதைகளும் (சிறுகதைத் தொகுப்பு – 1974), அறியப்படாதவர்கள் நினைவாக (கவிதைத் தொகுப்பு –1984) என்ற வரிசையில் அண்மைக்காலத்தில் வெளிவந்தவைகளாக தூவானம் (பத்தி எழுத்துக்கள்– 2001) மற்றும் மொழிபெயர்ப்புக் கவிதையாக பனிமழை (2002) ஆகியன அமைகின்றன.

ஈழத்து இலக்கியப்பரப்புக்கு அப்பாலும் பேசப்படும் மனிதராக இருந்துவருகிறார்; எழுத்துப்பணிகளோடு ஓவியம், சினிமா போன்ற துறைகளிலும் ஆர்வமும் அறிவும் நிரம்பியவராகவும் இருக்கிறார். படைப்பாளி, விமர்சகர் என்ற தளங்களுக்கு அப்பால் 'கலாசாரச் செயற்பாட்டாளராக, இயங்குவதிலேயே விருப்புக்கொண்டவர். அவரைச் சந்தித்து மேற்கொண்ட நேர்காணலை இங்கு தருகிறோம்.

? திரைப்படம் என்னும் வடிவம் பற்றிய விளக்கத்தை முதலில் கூறுங்கள்....

☑ நவீன அறிவியல், தொழில்நுட்ப சாதனைகளில் ஒன்றுதான் திரைப்படம்; ஆயினும் மிகமுக்கியமான கலைவடிவமாக நிலை நிறுத்தப்பட்டு நூறு ஆண்டுகள் கழிந்துவிட்டன. இதுவரை, மேதைமை நிறைந்த திரைக்கலைஞர்களினால் உலகெங்கிலும் ஏராளமான திரைக்காவியங்கள் உருவாக்கப்பட்டு, மனித குலத்திற்கு அளிக்கப்பட்டுள்ளன.

இலக்கியம், நாடகம், ஓவியம், இசை போன்றவற்றை இணைத்த 'கூட்டுக்கலை'யாகவும் அது உள்ளது; வெவ்வேறு துறைக் கலைஞர்களின் பங்களிப்பு இருந்தாலும், இறுதி ஆய்வில் அது 'நெறியாளரின் ஊடகம்' எனவே அழைக்கப்படும். 1895 இல் 'லூமியர் சகோதரரின்' 'பகற்போசன வேளை' என்ற துண்டுப் படத்துடன் ஆரம்பங் கொண்டது; ஆரம்பத்தில் மௌனப்படமாகவே இருந்தது. 1927 இல், 'ஜாஸ் பாடகன்' முதலாவது பேசும் படமாக வந்தது. 1913 இல் 'ராஜா ஹரிச்சந்திரா' என்ற முதலாவது இந்திய மௌனப் படத்தை 'தாதாசாகேப் பால்கே' பம்பாயில் வெளியிட்டார்; இந்தியாவின் முதலாவது பேசும்படமான 'ஆலம் ஆரா' 1931 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வெளிவந்தது. தமிழ்நாட்டில் முதலாவது மௌனப்படமான 'கீசகவதம்' 1916 இல், நடராஜ முதலியாரால் வெளியிடப்பட்டது; முதலாவது தமிழ்ப் பேசும்படமான 'காளிதாஸ்' 1931 ஒக்ரோபரில் வெளிவந்தது.

? இன்றைய நமது சமூகச் சூழலில் திரைப்படம்பற்றிய பொதுப் பார்வை எப்படி இருக்கிறது?

☑ பெரும்பாலும் கலையாக அன்றி ஒரு 'பொழுதுபோக்குச் சாதனமாகவே' திரைப்படம் பார்க்கப்படுகிறது. மகிழ்ச்சியாய்ப் பொழுதைப் போக்குவதற்குரிய ஒன்றுதான் திரைப்படம் எனக் கருதப்படுவதால், நம்பமுடியாத கதையமைப்பு, பாத்திரங்களின் அதிதீவிர சாகசங்கள், பொருத்தமில்லாத கோஷ்டி நடனங்கள் (உடற்பயிற்சிகள்...?!) நகைச்சுவை என்ற பெயரிலான 'அலட்டல்கள்' என்பனவெல்லாம் கேள்விக்கிடமேதுமின்றி ஏற்றுக்கொள்ளப்படுகின்றன; தமது பொதுப்புத்தி தொடர்ந்தும் அவமதிக்கப்படுவதை உணர முடியாதளவிற்கு, பழக்கமாகிப்போய்விட்ட ஒரு இரசனை முறைக்குள் பார்வையாளர் சிக்கியுள்ளனர். கல்வித்தரம், வர்க்க வேறுபாடு என்பவற்றைத் தாண்டி பரவலாக இந்த இரசனைப்போக்கே காணப்படுகிறது!

? திரைப்படம்பற்றிப் பேசும்போது 'திரைப்பட மொழி' என்ற சொற்றொடர் அதிகம் கையாளப்படுகிறது. இது தரும் விளக்கம் என்ன?

☑ இலக்கியம் எழுத்தையும், ஓவியம் வர்ணங்களையும் கோடுகளையும், இசை ஒலியையும் அடிப்படையாகக் கொண்டிருப்பது போலத் திரைப்படம் காட்சியை - ஒளியை அடிப்படையாகக் கொண்ட 'கட்புல ஊடகமாக' உள்ளது. காட்சிகள் மூலமாகத்தான் செய்திகளோ, கதையோ சொல்லப்படுகிறது. உதாரணமாக, வானொலியில் வாசிக்கப்படும் அதே செய்தியை வெறுமனே தொலைக்காட்சியில் வாசிப்பதுடன் நிறுத்துவது தவறு. வாசிக்கப்படும் செய்திக்குரிய 'காட்சிகளைக் காட்டுவது' தொலைக்காட்சி என்ற ஊடகத்திற்கு முக்கியம்; ஏனெனில், அது அடிப்படையில் ஒரு 'கட்புல ஊடகம்'.

எனவே, திரைப்படத்திற்குரிய காட்சிரூப மொழியில் காட்சி (Shot), கட்டம் (Scene), அங்கம் (Sequence) என்பன அமைகின்றன. இவற்றை முறையே - வாக்கியம், பந்தி, அத்தியாயம் எனச் சொல்லலாம். இவ்வாறு காட்சிகளைத் தொடர்ந்து கட்டமைக்கும் முறையில் அண்மைக் காட்சி (Close up), தொலைவுக் காட்சி (Long Shot), மத்திய காட்சி (Medium Shot), நோக்குக் கோணக் காட்சி (P.O.V. Shot), இருண்டு தோன்றல் (Fade in), மங்கிமறைதல் (Fade out), காட்சிக் கலப்பு (Dissolve), ஆக்க இணைப்பு உத்தி (Montage), உறைகாட்சி (Freeze), மெதுவான அசைவு (Slow Motion), விரைவான அசைவு (Fast Motion), விசிறிக் காட்சி (Panning Shot), பொருளை எம்மைநோக்கிக் கொண்டுவருதல் (Zoom) போன்றவை கையாளப்படும். இத்தோடு தொகுப்பு (Editing), முக்கியமானதாக இருக்கிறது; இன்னும் வேறு அம்சங்களும் உண்டு. ஒலி, இசை துணைப் பொருளாகக் கையாளப்படும். இவ்வாறாக கதைகூறப் பயன்படுத்தப்படும் ஊடக முறைமையே 'திரைப்பட மொழி' எனப்படுகிறது.

? 'நல்ல திரைப்படம்' என்ற முடிவு எந்த அளவு கோல்களைக் கொண்டு தீர்மானிக்கப்படுகிறது?

☑ கலை, இலக்கிய மதிப்பீடுகள் அகச்சார்பானவை; எனவே, எல்லாரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய 'பொது அளவுகோல்' இல்லை. ஆயினும் ஒரு கலைப்படைப்பின் அடிப்படை அம்சங்கள் எனச் சில உண்டு. அவற்றைக் கவனத்தில் எடுக்கவேண்டும். திரைப்பட வடிவத்தில் காட்சிப்படுத்தும் பண்பு முக்கியமானது. இயல்பான - நம்பத்தகுந்த கதை. செம்மையான பாத்திர உருவாக்கம், இயல்பான நடிப்பு, சம்பவச் சூழலின் உணர்வு வெளிப்பாட்டிற்குத் துணைசெய்யும் இசை - இயற்கை ஒலிகள் என்பன இணைந்து, இறுக்கமானதாய் - பிசிறல்கள் அற்று - வடிவ நேர்த்தியுடன் அமையும் திரைப்படத்தை 'நல்ல திரைப்படம்' எனச் சொல்லலாம்.

? 'நல்ல திரைப்படம்' என்ற வகையினுள் அடங்கக்கூடிய தமிழ்ப் படங்கள் சிலவற்றைக் கூறமுடியுமா?

☑ பூரணமான அர்த்தத்தில் நல்ல' கலைத் திரைப்படம் எனக் கூற முடியாவிட்டாலும், பல சிறப்பம்சங்களைக் கொண்ட படங்கள் உருவாக்கப்பட்டே உள்ளன. இவற்றை 'நடுத்தரப் படங்கள்' (Middle Cinema) என்ற வகையினுள் அடக்கலாம். அந்தநாள், ஏழைபடும்பாடு, தாகம், திக்கற்ற பார்வதி, உன்னைப் போல் ஒருவன், அக்கிரஹாரத்தில் கழுதை, குடிசை, உதிரிப்பூக்கள், பூட்டாத பூட்டுக்கள், பசி, அழியாத கோலங்கள், அவள் அப்படித்தான், தண்ணீர் தண்ணீர், மறுபக்கம், கறுத்தம்மா, பாரதி, குட்டி, நிலாக்காலம், நாயகன், தேவதை, முகம், பன்னீர்ப் புஷ்பங்கள், ரெறறிஸ்ற், அழகி என்பவற்றோடு வேறு சிலவற்றையும் சொல்லலாம். ஈழத் திரைப்படங்களில் பொன்மணி, காற்றுவெளி, முகங்கள், நிதர்சனம் தயாரிப்பில் வெளிவந்த பல குறும்படங்கள் என்பவை முக்கியமானவை.

? வகைதொகையற்ற தமிழ்த் திரைப்பட வெளியீடுகளிடையே 'சிறந்த படம்' ஒன்றைத் தெரியமுனையும் ஒருவரின் அணுகுமுறை எப்படி இருக்கவேண்டும்?

☑ யதார்த்தமான கதை, அதாவது தான் காணும் - கேள்விப்படும் - மனிதர்களின் பிரச்சினைகளை, உண்மையான வாழ்க்கையைச் சித்திரிப்பதாக உள்ளதா எனப் பார்க்கவேண்டும். தனது பொதுப்புத்தியை அவமதிக்கும் - தன்னை மடையனாக்கும் - அம்சங்களைக் கொண்டுள்ளவற்றைப் புறக்கணிக்கவேண்டும். ஆபாசமான காட்சிச்

# உணர முடியாத பார்வையாளர்!

சித்திரிப்புக்களின்மூலம் தன்னைக் கவரமுயலும் படங்கள், தன்னைக் குறைவாக மதிப்பிட்டு இழிவுபடுத்துபவை என்று உணர்தல் வேண்டும்; ஆகவே அவற்றை ஒதுக்கவேண்டும். குறைந்தளவு குறைபாடுகளுடன், வித்தியாசமான கதையுடன், காட்சிரூப வெளிப்பாடாக வருவனவற்றையும் தெரியலாம். உதாரணமாக பவித்ரா, காதல் கோட்டை, மூடுபனி, சிட்டுக்குருவி, ஜானி, என்னுயிர்த் தோழன் போன்ற படங்களைச் சொல்லலாம். நல்ல படங்களைப் பற்றிய தகவல்களைப் படிக்கும்போதோ கேட்கும்போதோ குறித்து வைத்துக்கொள்வதும் தெரிவதற்கு உதவியாய் அமையும்.

**? எமது விடுதலைப் போராட்டம் – ஈழத் தமிழ்மக்கள் தொடர்பான விடயங்களை உள்ளடக்கி வெளிவந்த தமிழகத் திரைப்படங்கள் பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?**

☑ சிறிய எண்ணிக்கையிலான படங்களே இவ்வாறு வந்துள்ளன. உலகெங்கும் பரந்துவாழும் ஈழத்தமிழர் 'சந்தை'யை இலக்காகக் கொண்டு, பண வருவாய்க்காகவே இத்தகைய படங்கள் அங்கு தயாரிக்கப்படுகின்றன. 'காற்றுக்கென்ன வேலி' ஒரு புறநடை. இவற்றில் பெரும்பாலானவற்றில் ஈழத்தமிழரின் உண்மைநிலைமைகள் சித்திரிக்கப்படவில்லை; அடிப்படைப் பிரச்சினைகள் என்னவென்றும் சொல்லப்படவில்லை. 'கன்னத்தில் முத்தமிட்டால்' படம் பல விடயங்களைக் கொச்சைப்படுத்துகிறது; எதிர்ப்பிரச்சாரம் செய்கிறது. 'காற்றுக்கென்ன வேலி' ஈழத்தமிழருக்கு ஆதரவான மனநிலையை வெளிப்படுத்தியுள்ளபோதும், பல தவறான அம்சங்களைக் கொண்டுள்ளது. 'ரெறறிஸ்ற்' ஒரு தற்கொலைப் போராளியின் உளவியலை ஆராயும் படமாக உள்ளது. அதன் முடிவு சர்ச்சைக்குரியது; வேறு கோணங்களில் அதனை நோக்கும் வாய்ப்பும் உள்ளது. ஆயினும், திரைப்பட மொழியினைக் கையாண்ட முறையில் முக்கியத்துவம் நிறைந்தது. போராட்டச் சூழல், பாத்திரங்களின் உருவாக்கம், உளவியல் பரிமாணம் என்பவற்றிலும் சிறப்பம்சங்களைக் கொண்ட படம். 'கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்', 'நந்தா' ஆகிய படங்களில் ஓரிரண்டு குறிப்பிடத்தக்க அம்சங்களைக் காணலாம்.

**? தொடர்ச்சியான அசாதாரண நெருக்கடிச் சூழல் கடந்த இருபது வருடங்களிற்கு மேலாக இருந்துவருகிறது; இத்தகைய நிலைமையிலும் மோசமான திரைப்பட இரசனை எவ்வாறு நிலவுகிறது?**

☑ மக்களின் பார்வைக்குக் கிடைப்பவை தமிழ்நாட்டுத் திரைப்படங்கள் தான்; இவற்றில் பெரும்பாலானவை பொழுதுபோக்கு 'மசாலாப் படங்கள்'! இப்படங்களும், இவைபற்றி வணிகப் பத்திரிகைகள் வெளிப்படுத்தும் போலிக் கருத்துக்களுமே பொதுமக்கள் திரளின் இரசனையைக் கட்டமைத்துவருகின்றன. இவற்றுக்கு மாற்றான நல்ல திரைப்பட இரசனைபற்றிய கருத்துக்களோ, நல்ல திரைப்படங்கள் அவற்றின் சிறப்பம்சங்கள் பற்றிய விளக்கங்களுடனோ மக்களைச் சென்றடைவதில்லை. நல்ல இரசனை பற்றிய புரிதல் மிகச் சிறிய தொகையினரிடம்தான் நிலவுகிறது. துன்பங்கள், நெருக்குதல்களை மறந்து பொழுதைப் போக்குவதற்குரிய சாதனம்தான் திரைப்படம் என்ற கருத்தே, பெரும்பாலான மக்களிடம் ஆழப்பதிந்துள்ளது; அது ஒரு கலை வடிவம் என்ற உணர்வு இல்லை. தொடர்ந்துவரும் இப் பின்னணியில்தான் அவலங்கள் - அழிவுகள் நிறைந்த அசாதாரணச் சூழலின் அழுத்தங்களிலிருந்து தப்புவதற்கும் 'மசாலாப் படங்களையே' சரணடைகிறார்கள்; இது ஒரு கசப்பான யதார்த்தம். இந்த நிலைமையை மாற்றுவது மிகவும் கடினமானது. நிறுவன பலத்துடன், பரந்துபட்ட மக்களைச் சென்றடையும் வேலைத்திட்டத்துடன் - பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், கலை நிகழ்வுகள் என்பவற்றில் - தொடர்ச்சியாகச் செயற்படுவதன்மூலம்தான் கொஞ்சம் கொஞ்சமாகவாவது மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

**? திரைப்படம் பற்றிய விடயங்களைத் தாங்கிவரும் ஈழத்துத் தமிழ்ப் பத்திரிகைகள் அவற்றைக் கையாளும் முறைபற்றிக் கூறமுடியுமா?**

☑ தினகரன், வீரகேசரி, சுடர் ஒளி, தினக்குரல், சங்குநாதம், தினமுரசு, இடி போன்ற பத்திரிகைகள் இவ்வாறு சினிமாச் செய்திகள், கிசுகிசுக்கள், நடிக நடிகையரின் நிழற்படங்கள் என்பவற்றை வெளியிட்டு வருகின்றன; குறிப்பாக நடுப்பக்கங்களில் 'கிளுகிளுப்பூட்டும்' ஆபாசக் காட்சிகளையே வர்ணப் படங்களாகப் பெருமளவில் பிரசுரிக்கின்றன. அதிலும் அரைகுறை உடைகளுடன்கூடிய நடிகையரின் அரை நிர்வாணத் தோற்றங்களே பெரும்பாலான இடத்தைப் பிடித்துக்கொண்டுள்ளன. இங்கு 'பெண் உடலை' வைத்து இந்த அச்சு ஊடகங்கள் 'விபச்சாரம்' நடாத்துகின்றன. மறுபுறம் இதே ஊடகங்கள்தான் தமிழ்ப்பண்பாடு, ஒழுக்கம், தேசிய இனத்தின் சீரழிவு, சமய உணர்வு என்றெல்லாம் உரத்து முழக்கமிடுகின்றன; யாருக்கும் வெட்கமில்லை! நல்ல சினிமா பற்றிய குறிப்புகள் மிகமிக அரிதாகவே இந்தச் சினிமாப் பக்கங்களில் வெளி வருகின்றன!

**? தமிழ்த் திரைப்படங்களின் 'உள்ளடக்கம்' பற்றிக் கூறுங்கள்...?**

☑ சில புறநடைகளைத் தவிர்த்தால் பெரும்பாலும் 'வாய்பாட்டு' ரீதியிலான உள்ளடக்கத்தையே கொண்டுள்ளன. காதல் - செக்ஸ், கோஷ்டி நடனம், சவால், பழிவாங்கல், வன்முறை, அடிதடி, நகைச்சுவை அலட்டல், திடீர் திருப்பம், இறுதியில் சுப முடிவு என்றவிதமான 'வாய்பாட்டில்' நம்பமுடியாத ஒரு கதை இணைக்கப்படும். கொஞ்சங் கொஞ்சம் வேறுபாடான பாத்திரங்கள், பின்னணிக் களங்கள் கையாளப்பட்டாலும் அடிப்படைச் சூத்திரம் மாறாது; எனவே, உள்ளடக்கம் 'ஒரேவித மசாலா' தான்!

**? தென்னிந்தியத் தமிழ்ப் படங்களிற்கு மாற்றீடாக, நமது சூழலில் படங்களைத் தயாரிக்க முடியுமா?**

☑ இத்தகைய படங்களை '90 நிமிடங்களிற்கு' மேற்படாமல், குறைந்த செலவுத் திட்டத்தில் 'விடியோ'வில் தயாரிக்க முடியாதென்றில்லை. 'நிதர்சனம்' நல்ல படங்களை இவ்வாறு தயாரித்த முன்னுதாரணம் ஏற்கெனவே உள்ளது. அக்கறை கொண்டோர், கலை - இலக்கியத் துறையில் செயற்பட்டு வருவோர்க்கு நிதி ஆதரவை வழங்கி, இத்தகைய முயற்சிகளில் ஈடுபடவேண்டும். எமது வாழ்க்கையை - பிரச்சினைகளை, எதிர்பார்ப்புக்களை வெளிப்படுத்தும் திரைப்படைப்புக்களிற்கு ஆதரவு வழங்கவேண்டியது எல்லாரதும் 'தார்மீகக் கடமை' என்ற உணர்வும் சமாந்தரமாக எமது மக்களிடையே உருவாக்கப்பட வேண்டும். சிங்களப் படத்துறை வளர்ந்துள்ளது போல், தேசியத் தமிழ்ப்படத் துறையும் வளர்க்கப்பட வேண்டும்.

**? இறுதியாக, திரைப்படத்தில் சமூக மாற்றத்துக்கான சாத்தியப்பாடுகளை எதிர்பார்க்க முடியுமா?**

☑ அச்சு வடிவிலமைந்த இலக்கியங்களின் வீச்செல்லை குறுகியது; மக்கள் திரளைப் பரவலாகச் சென்றடையும் சாதனம் திரைப்படம். காட்சிகளும் இசையும் பார்ப்பவரிடை இலகுவில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவை. அந்தவிதத்தில் சமூக மாற்றத்திற்குரிய செய்திகளைக் கதைவடிவிலும், விவரண வடிவிலும் திரைப்படத்தின்மூலம் வலுவுடன் கொண்டுசெல்ல இயலும். ஏற்கெனவே தி.மு.க. வினர் தமது கருத்துக்களைப் பரப்புவதற்கு தமிழ்த் திரைப்படங்களைப் பயன்படுத்தியுள்ளனர். திரைப்படம் மட்டும் தனியே சமூகத்தை மாற்றிவிடும் என்றில்லை; ஆனால், மாற்றத்திற்குத் துணையாகும் எண்ணங்களை அதனால் மக்களிடம் தோற்றுவிக்க இயலும். ஆயினும், வெறும் பிரச்சாரமாக அல்லாது, கலைத்துவத்துடன் கருத்துக்களைக் கொண்டுசெல்லும் படைப்பு முயற்சிகளே மனங்களில் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தும்! ●

## கலந்தாய்வரங்கு

# எங்கே போனது

* **பொதுவாகவே வர்த்தக ஊடகங்களின் உள்ளடக்கம் வியாபார நோக்கங் கொண்டே அமையும். மக்களின் நலனில் எவ்வித அக்கறையும் அற்றே அவை அநேக சந்தர்ப்பங்களில் அமையும். ஆனால் சமீபகால வர்த்தக ஒலிபரப்புகள் இன்னும் ஒருபடி மேலே சென்று நச்சு விதைகளைத் தூவி வருவது மிக சாதாரணமாகவே அவதானிக்கக் கூடியதாக உள்ளது.**

* **இவை தமது 24 மணிநேர ஒலிபரப்பை தமிழ் சினிமாப் பாடல்களை மட்டும் கொண்டே நிரப்பி வருகின்றன. ஒரே பாடலைக்கூட வெவ்வேறு தலைப்புகளின் கீழ் ஒரே நாளில் 3 தடவை ஒலிபரப்பும் கலையில் இவர்களை யாருமே விஞ்சமுடியாது.**

* **24 மணித்தியால நிகழ்ச்சியில் 6 மணித்தியாலங்களுக்கு மேல் தொலைபேசி அழைப்புக்களால் நிரப்பப்படுகின்றது. இதன் மூலம் நேரடியாகத் தமது நிகழ்ச்சிகள் பற்றிக் கேட்பவர்கட்கு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு இதுவே சிறப்பு என்று சொல்லப்படுகின்றது. இது மிக மோசமான இரசனைக்கு மக்களை பயன்படுத்தும் சுலபமான வழியாக அமைகிறது.**

* **24 மணிநேரமும் தமிழ் சினிமாவில் மயங்கிக் கிடக்கும் ஒரு தலைமுறை படிப்படியாக உருவாக்கப்பட்டுக்கொண்டு இருப்பது கவலைக்கிடமான ஒரு விடயமாகும்.**

* **பெண்களுக்கான நிகழ்ச்சிகள் வழமையான சமையல் குறிப்பு, அழகுக் குறிப்பு, வீட்டுக் குறிப்பு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்த ஒலிபரப்புக்கள் நேரடியான கருத்துப் பரிமாறல் என்ற போர்வையில் பெண்கள் பற்றி மிக மோசமான கருத்துக்களை முன்வைக்கின்றன.**

மேற்குறிப்பிட்டவை அனைத்தும் 24 மணி நேரமும் 'சிறந்த' வானொலியாக இயங்குபவற்றின் ஒலிபரப்புக்கள் பற்றியவை ஆகும். இலங்கையில் சூரியன் எப் எம், சுவர்ண ஒலி, சக்தி எப். எம் போன்றவை 24 மணிநேர ஒலிபரப்புகளை மேற்கொள்ளும் வானொலிகளாக இருக்கின்றன. இவற்றைவிட இலங்கை தேசிய சேவை, வர்த்தக சேவை, தென்றல் என்னும் மூன்று வானொலி சேவைகளும் நடைபெறுகின்றன.

இலங்கை வரலாற்றில் குறிப்பாக போராட்டம் கூர்மையடையத் தொடங்கிய 83களின் பின்னர் தகவல் ஊடகங்கள் எவ்வாறு நடந்து கொண்டன என்பதை அனைவரும் அறிவோம். அரச இனவாதத்தின் கோர, உண்மை முகத்தினைக் காட்டிய "குமுதினிப் படுகொலை" மற்றும் 'நவாலி', 'நாகர்கோவில்', 'யாகப்பர் ஆலயம்' போன்றவற்றின் மீது மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட விமானத் தாக்குதல்கள் மற்றும் பொருளாதாரத் தடை போன்ற நடைபெற்ற காலங்களில் எல்லாம் ஊடகங்களின் 'நடுநிலமை' நாம் அறிந்ததே. தமிழ் மக்களின் உயிருக்கும், உரிமைக்கும் அரசினால் எப்போதுமே அச்சுறுத்தல் நிலவிய காலங்களில் "தமிழ் மக்களின் சக்தியாக" எவையும் குரல் கொடுக்கவில்லை. எங்கே போனது இந்த வானொலி........?

யாழ்ப்பாணத்தில் சமாதானக் காற்று மிக வேகமாக வீசவதனால் தென்பகுதியில் இருக்கும் குப்பை கூழங்களை வடபகுதியில் குவித்து இறுகிய டெல்ரா கோபுரங்களை உருவாக்கி வருகிறது. ஒருபுறம் தவித்த முயல் அடிக்கும் வணிக கலாச்சாரம் (சுரண்டல்) மறுபுறம் சீரழிவுக் கலாச்சாரம் பட்டிதொட்டி எங்கும் நிறைகிறது. சமாதானம் வாழ்க!

நாவற்குழி "யாழ் வரவில்" தொடங்கும் வானொலி வரவேற்பு புத்தி ஜீவிகள் தொடக்கம் கல்வி அறிவற்ற பாமரனின் **பொக்கெட் றேடியோ** வரை தொடர்ந்துள்ளது. அது தொடர "நம்மால்" அனுமதி வழங்கப்பட்டது.

*'அண்ணே, இப்ப இந்த வானொலி வந்தாப் பிறகு எங்களப் போன்ற ஆக்களுக்கு நல்லம். ஆரோடையும் பிரச்சினைக்குப் போகத் தேவையில்லை. நாங்களும் எங்கட பாடுமா இருந்திடலாம்'*

தொழிலாளி - வயது 26
யாழ்ப்பாணம்.

*'இதில் எப். எம். மட்டும்தான் இழுக்கும். காதுக்க கெட்போன் போட்டுக் கேக்கலாம். மற்றவங்களுக்கும் பிரச்சினை இல்ல. எனக்கும் பிரச்சினை இல்ல. விடிய விடிய பாட்டுக் கேட்கலாம்'*

மாணவன்
A/L 2003
கோப்பாய்.

*"24 மணிநேரமும் பாட்டுக் கேட்கலாம்" அங்க, இங்க எண்டு போகத்தேவை இல்லைத்தானே. குசினியில் நிக்கிற எங்களுக்கு இது நல்லம். வேலை முடியிறதே தெரியிறதில்லை."*

தாய் - வயது 35
யாழ்ப்பாணம்.

வானொலி என்கிற தொடர்பு ஊடகம் பின்வரும் இருவழிகளில் முக்கியம் பெறுகின்றது.

வானொலி அறிவை எழுத்தறிவு மட்டத்திற்கு அப்பாலும் கொண்டு செல்கிறது. வானொலி கேட்பதற்கு வாசிப்புத்திறன் அவசியமில்லை.

* வானொலியின் வீச்சும் பரப்பும் எல்லை கடந்தது. அது அடி முதல் அனைவரையும் சென்றடையவும், கவரவும் கூடியது.

வானொலியின் இவ்வடிப்படையான அனுகூலம் மிக்க பண்புகளைக் கொண்டே இவ்வூடகத்தின் வாயிலாக 'இயங்கமுடியாத சமுதாய' உருவாக்கத்துக்கு அடித்தளமிடப்படுகின்றது. 24 மணி நேரமும் தனிமனிதன் ஒரு ஊடகத்தோடு இணைந்து இருத்தல், அவ்வூடகத்தினால் வழிநடத்தப்படல் என்பது எவ்வளவு மோசமானது.

**ஊடகங்கள் சமகாலத்தில் நிலவும் சமூக அமைப்பின் அதிகாரத்துக்கும் அடிபணிவதோடு அவற்றிற்கு துணையாகவும் தொழிற்படுகின்றன. இதனையே தொடர்பூடக பயங்கரவாதம (Media Terrorism) என்கிறார் நோம் சொம்ஸ்சி. இத்தகைய போக்குகளைக் கொண்ட ஊடகங்களை சமூகவியலாளர் தொடர்பூடக மாபிய (Meida mafia) என்றும் ஊடக வன்முறை (Media violation) என்றும் கூறுவர். தொடர்பூடகங்கள் மூலமாக பிற்போக்குத் தனமான பண்பாட்டை, கருத்தியலை ஏதாவது ஒரு அரசியல், நிறுவனம் சார் அமைப்புக்களே வழி நடத்துகின்றன.**

அரசு தென்பகுதியில் இளைஞர்களின் குரல் கொடுப்பை, ஆரோக்கிய உணர்வுகளை திசைப்படுத்த பெருமளவுக்கு ஊடகங்களையே பயன்படுத்தி வெற்றிகண்டு வருகிறது. பொது அநீதிகளை எதிர்த்து அமைப்பாக, கூட்டாக செயல்பட முடியாத அளவுக்கு சமூகச் சுற்றோட்டத்தில் இருந்து மக்களை அந்நியப்படுத்த மட்டுமல்ல மோசமான இரசனை, பொழுதுபோக்கு மனநிலை போன்றவற்றை நிரந்தரமாக உருவாக்குவதிலும் ஊடகங்களின் பங்களிப்பு முதன்மையானது.

**ஓய்வு என்பது உடல் ரீதியான தேவை, ஆனால் அந்த ஓய்வு நேரத்தைக் கழிப்பதற்காக பயன்படும் இசை, இலக்கியம், திரைப்படம், நாடகம், திருவிழா போன்றவை உளரீதியான வழிமுறைகள். விலங்குகள் தொடர்ந்து உழைப்பதற்கு அவற்றிற்கு உடல் ரீதியான ஓய்வு மட்டுமே போதுமானது. மனிதனுக்கோ உடல் ரீதியான ஓய்வு மட்டுமன்றி உளரீதியான உந்துதலும் தேவைப்படுகின்றது. எட்டு மணி நேரம் வேலை, எட்டு மணி நேரம் ஓய்வு, எட்டு மணி நேரம் உறக்கம். இந்த ஓய்வு நேரமும்கூட, முதலாளிகளால் திருடப் படுகின்றது. எமது ஓய்வு நேரத்தில், நாம் எதனை செய்ய வேண்டுமென்பதனையும் அவனே தீர்மானிக்கின்றான். நாம் தலையாட்டத் தொடங்கி விடுகின்றோம்.**

நாம் ஓய்வினை எவ்வாறு செலவு செய்கின்றோம் என்று யோசிக்கும்போது உழைப்பின் பயனையும், ஓய்வின் பயனையும் அவனே பெறுகின்றான். உலக மயமாதல், அமைதி வாழ்வு என்ற போர்வையில் எமக்கே சொந்தமான ஓய்வும், சிந்தனையும்கூட சர்வதேச மயப்படுத்தப்பட்டு வருகிறது. எதை உண்பது, எதை உடுப்பது, எதைப் பருகுவது, எதைப் படிப்பது, எந்தத் திரைப்படத்தைப் பார்ப்பது, எந்த இசையைக் கேட்பது என்பதற்கெல்லாம் ஒவ்வொரு நாடும் தனது மரபு, தனது பண்பாடு, கலாச்சார விழுமியங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கியிருக்கும் அனைத்தையும் அழித்து தமது அடையாளத்தையும், சிந்தனையையும், இத்தகைய ஊடகங்கள் தருகின்றன. 24 மணி நேரமும் நமக்குக் கிடைப்பவை எவை? நாம்

# இந்த வானொலி....?

விரும்பியதை கேட்கிறோமா? அல்லது விரும்ப வைக்கப்படுகிறோமா? சினிமாப் பாடலை கேட்பதற்காகவே காதுகளை திறந்து வைக்கும் மனநிலை உருவாகி வருகிறது.

*"தெரிவிப்பது நாங்கள் தீர்மானிப்பது நீங்கள்" என்று கூறும் இவர்களால் வழங்கப்படும் செய்திகள் தீர்மானிக்கப்பட்டு வழங்கப் படுவதில்லையா?*

*"விடிந்ததும் தாய்க்கு வணக்கம் சொல்லும் இளம் பிஞ்சுகளை – உன் தாயக வணக்கத்தை நாட வைக்கின்றாய்.*

*பொது அறிவு என்ற பெயரில் மாணவர்களைக் கவர்ந்து பாடல்களை ரசிக்க வைக்கின்றாய். கொண்டாட்டம் என்னும் தலைப்பில் – இளம் சமுதாயத்தை திண்டாட வைக்கின்றாய்.உலக வியப்புகளை சில நொடிகளில் சொல்லும் நீ சினிமாப் பாடல்களை கணக்கில்லாமல் ஒலிரப்புகின்றாய்.*

அ. நிசாந்தன்
A/L 2002
புனித சாள்ஸ் ம.வி.

*"சீதனம் வாங்காத சமுதாயம் வேண்டும்" எனக்கூறும் வானொலி அதற்கான ஆழமான கருத்துக்களை, ஆய்வுகளை சமூக அக்கறையோடு சொல்வதில்லை. இதில் என்ன விளங்குதெண்டால் தாங்களும் பல பிரசசனைகளைப பறறி பேசுகிறோம எனபதை பிரசசாரபபடுதத மடடுமேதவிர வேறு ஒனறும இல்லை.*

ஆசிரியை
வயது 33
யாழ்ப்பாணம்.

*பகல் அப்படியே நின்றுவிட்டால் எப்படி இருக்கும், இரண்டு மனம் கிடைத்தால் என்ன செய்யலாம், கடவுளிடம் வரம் கேட்கும் சந்தர்ப்பம் கிடைத்தால் என்ன வரம் கேட்கலாம்? போன்றதான சுவாரஸ்யமான விடயங்களை உரையாட வைத்தல் என சொல்லிக் கொள்வதனூடாக எம்மை கற்பனை உலகில் சஞ்சரிக்க வைக்கிறது. இதைத் தானே இன்றைய திரைப்படங்களும் செய்கின்றன?*

ஆசிரியை
வடமராட்சி

அண்மையில் 24 மணிநேர தமிழர்களின் சக்தியான வானொலியில் காசி ஆனந்தன் பற்றிய உரைநிகழ்ச்சி ஒன்று ஒலிபரப்பானது. வரவேற்கத்தக்கது. காசி ஆனந்தனின் கவிதை தமிழர்களின் விடுதலையோடும் உணர்வோடும் இரண்டறக் கலந்தவை, ஆனால் காசி ஆனந்தனைப் பற்றிக் குறிப்பிட்டு பின்னர் மோசமான சினிமாப் பாடல் ஒன்றை ஒலிபரப்பி தமது வழமையான பணியைச் செய்ததை எப்படி ஏற்பது? இவ்வாறு இன்னும் பல. பெண்கள் தொடர்பான விடுதலை கூர்மையடைந்து வரும் இவ்வேளையில் "பலவீனமானவர்கள் ஆண்களா? பெண்களா? தொலைபேசி உரையாடல்கள் மோசமானவை. ஈழப் போராட்ட ஓட்டத்தில் அரச இயந்திரத்தால் தமிழ்ப் பெண்களுக்கு ஏற்பட்ட அடக்கு முறைகள், வன்முறைக் கட்டவிழ்ப்புகள் போன்றவற்றால் உண்டான வடுக்கள் ஆறாத நிலையில் வாழும் பெண்கள் தொடர்பாக இவ்வானொலியின் அணுகுமுறை பற்றி இன்னும் நாம் பேசத் தொடங்கவில்லை.

பெண் விடுதலை மட்டுமல்ல பேசப்பட வேண்டிய மனித விடுதலை, இன விடுதலை, வர்க்க வேறுபாடுகள், சாதியப் பிளவுகள், அரசியல் திட்டமிட்ட குடியேற்றங்கள் அரசின் முகமூடித் தனங்கள் என தேசிய ரீதியிலும், சமூக மட்டத்திலும் தமிழர்களின் பிரச்சினைகள் பற்றி ஆழமான விவாதங்களையும், கருத்துக்களையும் இவ்வானொலி பேசுவதில்லை.

**"தாழ்நிலைப்பட்ட ஊடக வரலாறு ஒன்றினை எழுதுவதற்கான ஒரு முன்குறிப்பு" என்னும் தலைப்பில் "மூன்றாது மனிதன" சஞ்சிகையில் (ஜலை – செப்ரெம்பர்) பேரா. க. சிவத்தம்பி அவர்கள் இத்தகைய வானொலிகள் பற்றிக் குறிப்பிடுகையில், "பண்பலை (F.m.)" தனியார் வானொலியின் வருகையும் வானொலி ஊடகத்தின் கேட்டுநர் துலங்கலில் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக வானொலி அறிவிப்பாளர்களின் மொழியில் அறிவிப்புத் தன்மை போய் இப்போது அரட்டை அடிக்கும் பண்பு வந்துவிட்டது. வானொலியின் பங்குகொள்ளல் முறையில் இது பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த "அரட்டை முறை இன்னும் தமிழ் நாட்டில் தொடங்கப்படவில்லை."**

## ஆத்மன்

பல விடயங்களில் முழு உலகத்திற்கும் முன்னுதாரணமாக விளங்கும் நமது போராட்ட வாழ்வு, நமது மொழி, நமது பண்பாடு இவைதான் அரட்டை அடிக்கும் வானொலி முறையையும் தொடங்கியுள்ளது; தமிழ் உலகிற்கும் அறிமுகப்படுத்தியுள்ளது. மட்டகரமான, வக்கிரமான வரிகளைக் கொண்ட இன்றைய திரைப்பட பாடல்கள்தான் இத்தகைய 24 மணிநேர வானொலிகளின் மூலதனமாகும்.

இக்கட்டுரை எழுதிக்கொண்டிருக்கும் போது F.M. வானொலியில் ஒரு பெண் தொடர்பு கொள்கிறார். உரையாடலில் இருந்து அவர் O/L எடுக்கும் மாணவி என்பதை அறிய முடிந்தது. உரையாடல் முடிவில் அப்பிள்ளைக்காக "இதோ உங்களுக்கான எங்கள் தெரிவுப் பாடல்" அறிவிப்பாளரின் வாழ்த்துதலாக 'வாடிபொட்டபுள்ள என்னை யாரும் தொட்டதில்ல...' எனும் பாடல் ஒலிபரப்பாகியது. பரீட்சைக்கு மூன்று நாட்கள் இருக்கிறது என்றோ, பரீட்சைக் காலத்தில் இது தவறானது என்றோ புத்திமதி எதுவும் புகட்டப்படவில்லை.

இவ் வருடம் O/L எடுக்கப்போகும் மாணவர்களை அணுகி விசாரித்த போது விழித்திருந்து படிப்பதற்கு இவ்வானொலி உதவுகிறது என்று கூறினர். நமது கல்விச் சமூகம் எங்கே போய்க்கொண்டிருக்கிறது? நமது பிள்ளைகள் எவற்றைக் கற்றுக்கொள்ளப் போகிறார்கள்? எதைப் பரீட்சைக்கு எழுதப்போகிறார்கள். நாளை பாடசாலைக்குள் கையடக்கமான F.M அலைவரிசை வானொலிகள் வந்துசேரும் காலம் தொலைவில் இல்லை. அது சரி, நமது பாடசாலைகள் எப்போதுதான் முன் எச்சரிக்கையாக நடந்து கொள்கின்றன.

**"காதலை பாலியல் வெறியாகவும், பாலியல் மகிழ்ச்சியை களிவெறியாகவும், துயரத்தை விரக்தியாகவும் மடைமாற்றி விடுவதன் மூலம் மக்களின் இசை இரசனையையும், வாழ்வியல் மதிப்பீடு களையும் அதனூடாகச் சமூக உணர்வையும் சிதைப்பதில் திரையிசை வெற்றி பெற்றுள்ளது. சந்தையின் இரசனைக்கேற்ப உருவாக்கப்படும் இந்த இசையே 'காலத்திற்கேற்ற இசை' என்று கொண்டாடப்படுகின்றது.**

தரம் தாழ்ந்த நகைச் சுவை உங்களைச் சிரிக்க வைத்தால், களிவெறி நடனமும் இசையும் உங்களை மயங்க வைத்தால், அந்த இரசனை உங்களிடம் தோற்றுவிக்கும் உணர்ச்சி களிலிருந்து உங்களுக்குள்ளேயே வேறொரு ஆளுமை உரு வாகிறது என்று பொருள்.

செய்திகளை மட்டுமல்ல அனைத்து விடயங்களையும் தீர்மானிக்காமல், திட்டமிடாமல், ஆய்வுசெய்யாமல் மக்களுக்கு வழங்கமுடியும் என்பது எவ்வளவு பிற்போக்குத்தனமானதும் மோசமானதும். என்பது இங்கே பலருக்கு தெரியவில்லை.

பல வர்ண வேலைகளுடன் வெளிவரும் மோசமான பத்திரிகைகள் எவ்வளவு விரைவாக தாழ் இரசனையை உருவாக்கி விரைவாக மக்களை கவரமுயுமோ, அவ்வாறே 24 மணித்தியாலய வானொலியும் மக்களை தவறாக திசைப்படுத்துவதில் முன்னேறி வருகிறது. பொழுதுபோக்கு என்ற போர்வையில் நாம் தவறாக வழிநடத்தப் படுகிறோம். ஒருபுறம் மோசமான சினிமாவின் தாக்கம், சீரழிவுப் பத்திரிகைகள். இப்போது புதிதாய் 24 மணிநேர வானொலி. இனி எப்போது நமக்கு நம்மைப் பற்றி சிந்திக்க நேரம் வரப்போகிறது.

தனது நான்கு வருட நிறைவை அலட்டல் வானொலி கொண்டாடியபோது பேராசிரியர்கள், பாடசாலை அதிபர்கள், கவிஞர்கள், மருத்துவர்கள் வாழ்த்தும் ஆசீரும் வழங்கியதை எப்படி பொறுத்துக் கொள்வது..... நாம் எங்கே போகிறோம்? ●

# மறுபக்கம்

# போரின் குழந்தைகள் 03

## - உளவியல் நோக்கு -



போர்க்கால நெருக்கீட்டு அனுபவங்களால் சிறுவர்கள் எவ்வாறான பிரதிபலிப்புகளை வெளிப்படுத்துவர் என்பதைப் பற்றிக் கடந்த இதழில் பார்த்தோம். இவ்வாறான பிரதிபலிப்புக்களை அதிகம் அவதானிப்பவர்கள் பெற்றோர், ஆசிரியர் ஆவர். எனினும் இவை சிறுவர்களின் உள நலத்திற்கு உகந்ததல்ல என்பதைப் புரிந்துகொண்டாலும் இவற்றின் பாதிப்புக் களைக் குறைக்கவோ, இல்லாதொழிக்கவோ எவ்வாறான அணுகுமுறைகளைக் கையாளவேண்டுமென்பதை உணராதிருக்கக் கூடும்.

போர்க்கால நெருக்கீடுகளைக் கையாள வேண்டுமெனில் வீட்டிலோ அல்லது வகுப்பறையிலோ "**குணமாக்கும் சூழல**" வேண்டும். அதாவது பிள்ளைகளுக்கு உணர்வுபூர்வமான ஆதரவை வழங்க வேண்டுமெனில் அவர்களின் கேள்விகளுக்கு ஆரோக்கியமான விதத்தில் பதிலளிப்பது அவசியம். அத்தோடு அவர்களின் பயத்தையும் கவலையையும் கவனித்து தனிப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வுகாண ஊக்குவிப்பதன் மூலம் அவர்களுக்கு ஏற்படுகின்ற சங்கடமான நிலமைகளை சமாளிக்கவும் கையாளவும் உதவி புரியலாம்.

◈ பிள்ளைகளுக்கு **பாதுகாப்புணர்வு** தேவையான ஒன்று. எனவே பெற்றோர் அல்லது பிரதான பராமரிப்பாளருடைய நிரந்தர அல்லது நீண்டகாலப் பிரிவு, தவிர்க்கப்படல் வேண்டும். இவ்வாறான பிரிவுச் சூழல் பிள்ளைகளுக்கு ஏற்படும் பட்சத்தில் ஆசிரியர் அல்லது நெருங்கிய உறவினர் அதை நிவர்த்தி செய்தல் அவசியமாகும். இப்படியான சந்தர்ப்பங்களில் ஆசிரியர்களுடைய பணி இன்னும் அதிகமாக எதிர்பார்க்கப்படுகிறது.

◈ பிள்ளைகள் தமது நெருக்கீட்டு அனுபவங்களை விளங்கிக் கொள்ளவும், வெளிப்படுத்தவும் கூடியவர்கள். எனவே விளையாட்டு, வாசிப்பு, சித்திரம் வரைதல், தாமாகவே கதை சொல்லுதல், பாடல்களைப் பாடுதல் அல்லது இயற்றுதல், இசையை இரசித்தல் அல்லது இசையில் ஈடுபடுதல், நாடகம், நடனம் மற்றும் கலை நிகழ்வுகளில் பங்கு பற்றுதல், எழுத்தாற்றலை வளர்த்தல் என்பவற்றுக்கூடாகவும் தமது பிரச்சினைகளை வெளிப்படுத்துவர். உதாரணமாக தமது நெருக்கீட்டுச் சம்பவங்களை கற்பனையாக விளையாடுதல் அல்லது சித்திரம் வரைவதனூடாக தமது உணர்வுகளை வெளிப்படுத்தி அதிலிருந்து மீண்டு கொள்வர். ஆகவே இவ்வாறான செயற்பாடுகளை தடுக்க முயற்சிக்காது, அவற்றை இனங்கண்டு **ஆதரவும் ஊக்கமும் வழிகாட்டலும** வழங்குவது பெற்றோர், ஆசிரியர்களது கடமையாகும்.

◈ நெருக்கீட்டு அனுபவங்களுக்கு உள்ளான பிள்ளைகளை அவர்களது **நாளாந்த செயற்பாடுகளில** ஈடுபட வைத்தல் நன்மை பயக்கும். குறிப்பாக பாடசாலைக்கு அனுப்புதல், அயலில் நடைபெறும் கலை நிகழ்வுகள், மங்களகரமான நிகழ்வுகளுக்கு கூட்டிச் செல்லல், நண்பர்களுடன் விளையாட விடுதல், உணவு, நித்திரை போன்றவற்றை ஒழுங்குபடுத்தல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

◈ திடீர் குண்டு வெடிப்பு, காணாமற் போதல், கைது செய்யப்படல், இறப்பு போன்ற சம்பவங்களால் ஏற்படுகின்ற நெருக்கீட்டு அனுபவங்களை பிள்ளைகள் எதிர்காலத்தில் பிரதிபலிப்பர் என்பதைப் பெற்றோர் மறந்து விடுகின்றனர். இவ்வாறான சம்பவங்களை அவர்களுடன் கதைப்பதோ, ஞாபகமூட்டுவதோ பிழையானது என்ற தப்பான அபிப்பிராயமும் எமது சமூகத்தில் நிலவுவதால் இப்படியான போர்ப்பாதிப்புக்கள் பற்றி கதைப்பதை தவிர்த்து விடுகின்றனர். உண்மையில் தமது அனுபவங்களை மீண்டும் மீண்டும் கதைத்து தமது உணர்ச்சிகளை இயல்பாக வெளிப்படுத்த சந்தர்ப்பமளித்தல் வேண்டும். அத்தோடு பிள்ளைகள் கூறுகின்ற நெருக்கீட்டு அனுபவங்களை பெற்றோர், ஆசிரியர் அக்கறையுடன் செவிமடுக்க வேண்டும். இல்லையேல் அவர்கள் தம் உணர்ச்சிகளை முழுமையாக வெளிப்படுத்த மாட்டார்கள். இது அவர்களுக்கு மேலும் பிரச்சினைகளை உருவாக்கும். எனவே தமது உணர்ச்சிகளை செவிமடுக்கிறார்கள் என்பதை பிள்ளைகள் உணரும் பொழுதுதான் போர்க்கால நெருக்கீட்டு **மனவடுக்களை வார்த்தைகளூடாக** முழுமையாக வெளிப்படுத்துவர். இதுவே பிள்ளைகளுக்கு ஆரோக்கியமானது.

◈ **கட்டிளமைப் பருவத்தினர் தமது நெருக்கீட்டு அனுபவங்களை தம் குடும்பத்தாரோடு பகிர்ந்து கொள்வதை பெரிதும் விரும்ப மாட்டார்கள.** மாறாக தமக்கு ஒத்த நண்பர்கள், ஆசிரியர்கள், குழுத்தலைவர்கள், மதத் தலைவர்கள் மற்றும் பெரியவர்களிடம் பகிர்ந்து கொள்ளவே அதிகம் விரும்புவர். எனவே இவ்வாறான நேரங்களில் ஆசிரியரும் பெற்றோரும் அவர்களை இனங்காணுதல் மிக முக்கியமானது. ஏனெனில் அதிக உதவி தேவைப்படும் இந்நேரத்தில் தான் பொருத்தமானவர்கள் யாராயினும் முன்வந்து இவர்களுக்கு **பாதுகாப்பு உணர்வையும் நம்பிக்கையையும் கொடுத்தல் அவசியமானதாகும்.**

◈ மேலும் சமாதான காலத்தின்போது நாட்டைப் புனரமைப்பதில் பெரும்பங்கு வகிக்க வேண்டியவர்கள் இப்பருவத்தினர் என்பதை அவர்களுக்கு உணர்த்த வேண்டும். இவ் உணர்வு **சுய கட்டுப்பாட்டை** ஏற்படுத்துவதோடு எதிர்கால சமூக நடவடிக்கைக்கான பெரும்பங்களிப்பையும் இவர்களில் ஏற்படுத்தும். உதாரணமாக ஒழுங்குபடுத்தப்பட்ட சமாதான பாசறைகள், வைத்தியசாலை பராமரிப்புகள், சிரமதானங்கள், உதவியற்றோருக்கு உதவி பெற்றுக் கொடுத்தல், வசதியற்றோருக்கு கல்வியறிவூட்டுதல் அல்லது அதற்குரிய வசதிவாய்ப்புக்களை ஏற்படுத்தல், கோவில் பணிகளில் ஈடுபடுதல், ஊரிலுள்ள பொதுச்சேவை அமைப்புக்களுடன் சேர்ந்து புனரமைப்பு வேலைகளில் உடல் உள ரீதியான பங்களிப்பையும் ஒத்துழைப்பையும் வழங்க ஊக்கப்படுத்தல் போன்ற இன்னோரன்ன பணிகள் **தலைமைத்துவத்தையும், சமூக மனப்பான்மையையும் மற்றவர்களுடன் இணைந்து பணியாற்றும் அவசியத்தையும்** இவர்களுக்கு கொடுக்க உதவி செய்யும்.

◈ போர் அனுபவ நெருக்கீட்டில் இருந்து பிள்ளைகள் விடுதலையடைய நாடுகின்ற இடங்களில் ஒன்றாக பாடசாலையும் விளங்குகின்றது. வகுப்புகள் ஒழுங்காக நடைபெறுவதும் இயலுமானவரை ஒரே ஆசிரியரே வகுப்புக்களுக்கு தலைமை தாங்குவதும் பிள்ளைகளின் நாளாந்த வாழ்க்கைக்கு **நம்பிக்கையும் உறுதியையும்** கொடுக்கும்.

**"இளம் பருவத்தினர் தமது போர் நெருக்கிட்டு அனுபவ உணர்வுகளை தம் குடும்பத்தரோடு பகிர்ந்து கொள்ள பெரிதும் விரும்பமாட்டார்கள்"**

◈ ஒருவகுப்பில் அதிகமான மாணவர்கள் போர் நெருக்கீட்டை அனுபவித்தவர்களெனின், அவ் அனுபவங்களைப் பற்றி கலந்துரையாடுவதற்காக வாரத்தில் ஒரு தடவையேனும் குறிப்பிட்டளவு நேரத்தை ஒதுக்குவது நன்மை பயக்கும். உதாரணமாக போர்ச் சம்பவமொன்றைப் பற்றி மாணவர்களிடம் கேட்டு அவர்களது சொந்த அனுபவங்களிலிருந்து எழுகின்ற உணர்ச்சிகளைப் பகிர வாய்ப்பளிக்கலாம். அத்துடன் எதிர்காலம் பற்றிய கவலைகளையும் வெளிப்படுத்த சந்தர்ப்பம் அளிக்கலாம்.

◈ ஆசிரியர்கள் வகுப்புச் சூழலை ஒரு கட்டமைப்புக்குள் வைத்திருந்தால் மாணவர்கள் வேலையில் மனதை ஒருமுகப்படுத்திக் கொள்வர். அத்துடன் சக மாணவர்களையும் ஆசிரியர்களையும் **மதிக்கவும்** பழகிக்கொள்ளவர்.

◈ கற்றல் இடர்பாடுகள் அல்லது அதிக உணர்ச்சிக் கோளாறுள்ள பிள்ளைகளில் ஆசிரியர் கூடிய கவனம் செலுத்த வேண்டும். இப்பிள்ளைகளின் பெற்றோரைச் சந்தித்து அவர்களின் பிரச்சினைகள் பற்றியும் முன்னேற்றம் பற்றியும் கலந்துரையாடலாம். ஆசிரியர்களாலும் பெற்றோராலும் உதவ முடியாத பிள்ளைகளை தகுந்த சேவையாளரிடம் வழிகாட்டி விடலாம். உதாரணமாக பொருளாதார உதவிகள் மற்றும் உளவளத்துணையாளர், விசேட வைத்திய நிபுணர் போன்றோரின் வழிகாட்டல்களை ஏற்படுத்திக் கொடுப்பதனூடாக இம் மாணவர்களின் முன்னேற்றத்திற்கு உதவி புரியலாம்.

எனவே மேற்கூறப்பட்ட அணுகுமுறைகளைக் கையாளுவதனூடாக பிள்ளைகளுக்கு ஏற்படுகின்ற போர்க்கால நெருக்கீட்டின் பாதிப்புக்களை குறைக்கவோ, இல்லாதொழிக்கவோ கூடும்.

எனினும் எல்லாப்பிரச்சினைகளுக்கும் முரண்பாடுகளுக்கும் அடிப்படையாக இருப்பது திணிக்கப்பட்ட போர்ச் சூழலும் சமூக ஏற்றத்தாழ்வுகளும் ஒடுக்குமுறைகளும் ஆகும். எனவே இவற்றுக்கான நிரந்தரத் தீர்வுத்திட்டங்களை முறையாகவும் சரியாகவும் செயற்படுத்த வேண்டும். ஆனால் ஒருபுறம் இவை தொடர்ந்து கொண்டிருக்க மறுபுறம் இவற்றுக்கு புனர்வாழ்வு தேடும் முயற்சிகளே இன்று வரை நடைபெற்று வருகின்றமையை நாம் அவதானிக்கலாம். எனவே பாதிப்பை ஏற்படுத்தாத சூழ்நிலையில் நடக்க முயல்வோம்.

- கனகன் -



**வேதம்
படைக்கவும்
நீதிகள் செய்யவும்...**

அவள்:-

பெண்களுக்கான பகுதி. மானுடத்தின் மறுபாதி அவள். ஆனால் இன்றைய அவளோ...? பெண்களுக்கான விடுதலை என்பது அரசியல், சமூகம், பொருளாதாரம், சமயம், வாழ்வு என்பவைகளுக்கூடாக ஏற்றத் தாழ்வு இன்றி ஏற்படவேண்டும். ஏதாவது ஒன்றில் முன்னுக்கு நிற்கும்போதெல்லாம் மீண்டும் 'அவள்' பழைய சுழியினுள் அமிழ்ந்து போகிறாள். அவள் பற்றி சிந்திப்போம். செயல்படுவோம். இல்லையேல் வாழ்வு.... தனிமை...காதல்... விரட்டியடிக்கப்படுதல்.... விரக்தி... மரணம்... இறுதியில் எஞ்சுவதற்கு, அவளிடம் ஏதுமில்லாமல் போகலாம்.

- அவள் -

பெண் விடுதலை என்பது ஆண்களுக்கு நிகராக மாறுவதோ அல்லது ஆண்களை ஒடுக்குவதோ அல்ல. மாறாக பெண் தனது பலத்தில், துணிவில், சுதந்திரத்துடன் வாழ்தலைக் குறிக்கும் என்பது எனது எண்ணம். அதாவது பெண்ணுக்குள்ளும் ஒரு மனம், அதில் அவளுக்கேயுரிய தனிப்பட்ட எதிர்பார்ப்புகள், கனவுகள், கருத்துக்கள் நிறைந்துள்ளன. அவை மிதிக்கப்பட வேண்டியவை அல்ல. மதிக்கப்பட வேண்டியவை. அதுபோல் பெண் ஒடுக்குமுறை என்பதும் தனித்து ஆண்களால் செய்யப்படுபவை அல்ல மாறாக பெண்களாலேயே பெண்கள் ஒடுக்கப்படும் சம்பவங்கள் எத்தனை? ஒட்டு மொத்தமாக பெண் ஒடுக்குமுறை என்பது எமது சமூகத்துடனேயே ஊறிப்போன ஒன்று. எமது சமூகக் கட்டமைப்புக்கள் எல்லாமே ஆண்களுக்கு சாதகமான தன்மை அமைக்கப்பட்டிருக்கின்றன. பெண்ணுரிமை, பெண்விடுதலை ஆண்களால் மட்டும் தந்துவிட முடியாதவை. மாறாக எமது சமூகக் கட்டமைப்பிலேயே ஊற்றெடுக்க வேண்டும். சமூகத்தின் சிறிய அலகாகிய குடும்பத்திலே இது ஆரம்பிக்கப்பட வேண்டியது.

சாதாரணமாக எமது குடும்பங்களை எடுத்துக் கொண்டால், ஒரு பெண் சிறுவயதிலிருந்தே இன்னொரு வீட்டுக்கு ஏற்ற விதத்திலேயே வளர்க்கப்படுகின்றாள். அதிகம் கதைக்கக் கூடாது, பொறுமைக்கு இலக்கணமாகத் திகழ வேண்டும், அதிக துடுக்குத் தனம் கூடாது, எந்நேரமும் சிரித்த முகத்துடன் தோற்றமளிக்க வேண்டும், சமையற் கலையில் கைதேர்ந்தவளாகவும் விருந்தினர்களை உபசரிப்பதில் சளைக்காதவளாகவும் இருக்க வேண்டும். இப்பேற்பட்ட நுணுக்கங்கள் பல சிறுவயதிலிருந்தே ஊட்டப்படுகின்றது. இன்னொருத்தனுக்கு வாழ்க்கைப்பட வேண்டியவள், நல்ல மனைவியாக, நல்ல மருமகளாக வாழவேண்டும் என்பதற்காக குடும்பத்தில் பயிற்றுவிக்கப்படுகிறாள். ஆண் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இலக்கணம் இல்லை. ஆண் எப்படி இருந்தாலும் பெண் விட்டுக்கொடுத்து வாழப்பழக வேண்டியவளாக உள்ளாள்.

பெரும்பாலான குடும்பங்களில் பெண் தனது கருத்துக்களைக் கூற முடியாத அவலம். எல்லாவற்றையும் பொறுமைக்கு இலக்கணமான அவள் மனதுக்குள் பூட்டி வைத்துக்கொள்ள வேண்டும். தட்டுத்தடுமாறிக் கேட்டுவிட்டால் அவள் "வாயாடி". தனக்கு மட்டுமே உரிமையுள்ள கணவனின் நடத்தையைக் கேள்வி கேட்கக் கூடாது. சம்பளத்தின் மிகுதியைக் கேட்கக் கூடாது. அவனது துர்நடத்தை எதைப்பற்றியுமே கேள்வி கேட்காது, தனது கருத்துக்களைத் தெரிவிக்க முடியாது இயந்திரப் பொம்மைகளான பெண்களும், பெண் விடுதலைக் கோஷம் போடும் எமது சமூகத்தில்த்தான் இருக்கிறார்கள். இவர்களுக்கு பெண் விடுதலை, பெண்ணுரிமை என்பது எவ்வளவு தூரத்துக்குப் பொருத்தமானது. என்று நாம் சிந்திக்க வேண்டிய காலம் வெகு தூரத்துக்குப் போகக் கூடாது என்பது என்னுடைய அவா.

இந்தவகையில் பார்க்கப்போனால் 'திருமணம் செய்யவேணும் என்பதற்காக செய்து பிள்ளை பெற வேண்டுமென்பதற்காக பிள்ளையும் பெற்று இயந்திரமான பெண்கள் எத்தனை பேர்?' என்ற தர்ஷாவின் கேள்வி நியாயமாகவே படுகின்றது. பெண்விடுதலைச் சிந்தனைகள் பேசப்படுகின்ற அளவுக்கு பெண்களுடைய உரிமைகள் மதிக்கப்படுவதில்லை என்று தான் நான் எண்ணுகிறேன்.

விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்கு அளப்பரியது. இவ்வாறு அரயசியலில் ஈடுபடுவோர் ஒரு பகுதியினர் மட்டும்தான். எல்லாப் பெண்களும் இவ்வாறு அரசியலில் ஈடுபட முடியாது. இதில் ஈடுபடாத ஏனைய பெண்களும் இந்தச் சமூகத்தில் தான் வாழ்கிறார்கள். நாளாந்தம் பல்வேறு வழிகளில் ஒடுக்கப்படும் இவர்களுக்கான விடுதலைச் செய்தி என்ன?

பெண் விடுதலை என்றவுடன் எம் சிந்தனையில் வருபவை படித்த, நடுத்தர வர்க்கப் பெண்களுடைய பிரச்சினைகள் தான். ஆனால் இதற்கு மறுபக்கமாக படிக்காத, பாமர வர்க்கத்துப் பெண்கள் பற்றி, அவர்கள் எதிர்கொள்ளும் நாளாந்த வாழ்க்கைப் பிரச்சினைகள், சாதிய ஒடுக்குமுறை பற்றி எவரும் சிந்திப்பதில்லை. தாம் ஒடுக்கப்படுகிறோம் என்பதைக் கூட உணரமுடியாது, உணர்ந்தவற்றை சொல்ல வழியின்றி அல்லாடும் இப் பெண்கள் நிலை எவருக்கும் தெரியாது. பெண் மென்மையான சுபாவமுள்ளவள் எனக் கருதும் எமது சமூகம் அவளது மெல்லிய உணர்வுகளை ஒருபோதும் மதிப்பதில்லை. உண்மையில் இன்று பேசப்படும் பெண்விடுதலைச் சிந்தனை பற்றி இவர்கள் மத்தியில் தெளிவற்ற நிலை தான் நிலவுகிறது. பெண்விடுதலை என்றால் என்னவென்று தெரியாத நிலையில் வாழும் இவ்வாறான அடிமட்டப் பெண்களிடம் தான் இச்சிந்தனைகள் முதலில் சென்றடைய வேண்டும் தெளிவு பெற வேண்டியவர்கள் இவர்கள் தான். ஏனெனில் **ஒடுக்கப்படும் ஒரு இனம் தாம் ஒடுக்கப்படுகிறோம் என்பதை உணரும் பொழுதுதான் விடுதலைக்கான வழி பிறக்கும்.** இதுதான் உண்மை. இது பெண்ணினத்துக்கும் பொருந்தும். இம்முயற்சியின்றி வெறுமனே கோஷம் போடுவது பயனற்றது. வருடாவருடம் 'மகளிர் தினம்' கொண்டாடுவதைத் தவிர.

இவ்வாறாக பெண்கள் பற்றிய மிகவும் பரந்த பார்வைதான் தர்ஷாவுடைய கோள்விகளில் தொனிப்பதை உணர்ந்து கொள்ள முடிந்தது. பெண்களுடைய பிரச்சினைகளை மேலோட்டமாக அல்லாது சமூகத்தின் எல்லா மட்டத்தையும் மிக உன்னிப்பாக அவதானித்து ஆழமான கருத்துக்களைத் தந்துள்ளார். அனைவரினதும் சிந்தனையைத் தூண்டும் வகையில் அவை அமைந்துள்ளன. நமது சமூக அமைப்புக்கள் எல்லாவற்றின் மீதும் அவர் கொண்டுள்ள அவநம்பிக்கையையும் விரக்தியான மன உணர்வையும் அவருடைய எழுத்துக்கள் பிரதிபலிப்பதை என்னால் உணரக் கூடியதாக உள்ளது.

கஜனி,
கொக்குவில.

* * *

## அவளுக்கும் உங்களுக்குமாய்....

**அன்பின் நண்பிருக்கு!**

மனிதத்தின் இருப்பைத் தேடும் உங்கள் தேடலின் பதின்மூன்றாவது இதழிலே எரியும் சமூகம் என்ற பகுதியில் "அவள்" எனும் பெண்களுக்கான பக்கம் ஒன்றை ஆரம்பிக்கப் போவதாக எழுதியிருந்தீர்கள். பொதுவாக பத்திரிகைகளில் மகளிர் பக்கம், பூவையர் பூஞ்சோலை, மங்கையர் மஞ்சரி போன்ற தலைப்புக்களில் பெண்களுக்கான பக்கம் ஒதுக்கப்படுகின்றது. ஆனால் அவை அழகுக் குறிப்புகள், சமையல் குறிப்புகள், சிகை அலங்காரம், உடையலங்காரம் போன்ற விடயங்களைத் தாங்கிவர நீங்களோ பெண்களின் உணர்வுகளை, கருத்துக்களை, எதிர்பார்ப்புக்களை, மாற்றுச் சிந்தனைகளைத் தாங்கி வர வேண்டுமென்று எதிர்பார்க்கின்றீர்கள். அதை நான் வரவேற்று நிற்கின்றேன். எனவே என்னுடைய சில கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்று விளைகின்றேன்.

ஒரு பெண் தாயின் கருவறையில் மட்டுமே நிறை மகிழ்ச்சியை அநுபவிக்கிறாள் என்றே நான் நினைக்கின்றேன். இதை நீங்கள் எந்தளவு தூரத்துக்கு ஏற்றுக் கொள்வீர்களோ தெரியவில்லை. அவள் இந்த பூமிக்கு வந்தவுடன் கேட்கும் அழுகை மட்டுமே சத்தமாக இருக்கின்றது. அதன்பின் அவளுடைய அழுகையெல்லாம் மௌனமாக அவளுக்கு மட்டுமே கேட்கும் அழுகையாக இருக்கின்றது என்பது தாழ்மையான கருத்தாகும். எத்தனையோ விதத்தில் பெண்கள் முன்னேறி வரும் இந்தக் காலத்திலும் பெண் குழந்தை என்றவுடன் முகத்தைச் சுழிக்கிறார்கள். அதுவும் தாய் தான் பெண்ணாக இருந்து கொண்டே பெண் குழந்தையை பெறுப்பது வேதனைக்குரியது. ஒருவேளை தான் அநுபவித்த துன்பத்தை தன் பிள்ளை அநுபவிக்கக் கூடாது என்று தான் வெறுக்கிறார்களோ? குறைகூற இடமில்லை.

மஞ்சி
யாழ்ப்பணம

# புதிய வயல்

## உயிர் மூச்சுடன் அது...

போர் வடு அழிந்த
புலர்ந்த வானம் சிவந்து
புழுதி நிலம் வெழுத்து ~ பொதுவாய்
நீள்கிறது எங்கள் வாழ்வு.
கூட இருந்த உறவுகளை
கூட்டித் துடைத் தெடுத்து
குழியில் போட்டு அழித்த ~ அந்த
கரிய போர்வைக்குள் கூட
அடியூற்றாய்

மனிதம் ~ அது
அது இன்னும்...

தேவதாசன் எழில் மங்கை
குருநகர்

## எரிகிறது தேசம்...

பேனாமுட்களோடு
தர்க்கம் புரியும்
எத்தனை முரண்பாடுகள்
சோகங்கள் போட்டியிட்டு
வந்தடைந்த காலம்.

இன்னும் யதார்த்தங்கள்
தடம் புரள்கின்றன.
மெய்மைகள்
உதாசீனம் செய்யப்படுகின்றன.
மாண்டு போகிறது
எம்~ கலாச்சாரம்.

பெண் உரிமை
பேசாப் பொருளாயின்
நேற்றுப் போல்
இன்றும் தேசம்...

யோ. பிரஷாந்தி
யாழ் பல்கலைக்கழகம

## புதிய உதயர்

காடேறிக் கலாச்சாரம் நாளும்
காண்பியமாய் நாடேறி வந்த கடா.
சந்தியிலே குந்தி வம்பளக்கும்
சரித்திரமும் தொடருது ~ இங்கே
சீதையை துகில் உரியும் துச்சாதனர்கள்
வீதிச் சண்டியராய் அலையும்
நிலை ~ இன்று

கலாசாரம் இது வென்று எப்போது
கண்டாய்
கசிப்பும் சிகரெட்டும் ஆபாச சினிமாவும்
அடிதடியும் தீனாக் குறப்பும் இன்னும்
ஆளவந்தான் நந்தா வெட்டென்றும்
மொட்டை போட்டு திருப்பதி போகிறாயா
மொத்துவதற்கு ஆளில்லை என்று
பம்மாத்து காட்டாதே
பச்சை மட்டைகள் காத்திருக்கின்றன.

- ஜீ. டிலானி பவித்திரா -
வண்ணார்பண்ணை

## நம் தமிழர் நிலை

செந்தமிழர் நிலை எண்ணி பாராய் ~ மனமே
செகம் புகழ்ந்த செந்தமிழர் நிலை எண்ணி
பாராய்
வந்ததுயர் அத்தனையும் தாங்கி மண்ணில்
வாழுகின்ற நிலையை நீ எண்ணிப் பாராய்
நொந்தவர் வாழுகின்ற போதும் அவரை
நோய் நொடி வாட்டுகின்ற போதும்
சொந்த பந்தம் எல்லாம் அழிந்து விட்ட போதும்
சொந்த மண் வேணும் என்ற நிலை
எண்ணிப்பாராய்.

இத்தனை அச்சம் இருந்தபோதும் ~ தமிழன்
ஈழமண்ணில் நிமிர்ந்து வாழும் நிலைபாராய்
எத்தனை துன்பங்களையும் தாங்கி நிற்கும்
நிலை யெண்ணிப்பாராய்
தினமும் ஒரு சோதனை வந்த போதும்
நிலை தவறிப்போகாத நிலை எண்ணிப்பாராய்
சத்தியமே வெல்லுமென நம்பும் இவர்கள்
சரித்திரத்தை நீ எண்ணிப்பாராய்.

S. பிறேமாஜினி
A/L 2004
திருக்குடும்ப கன்னியர்மடம



என்னை
சிறைப்படுத்தியவர்களே
விடுதலை கொடுங்கள் - நான்
சுதந்திரமாக பறந்து
செல்ல.

யோ. அ. சாம்சன் (A/L)

## சமாதானம் பிறக்குமா...?

மீண்டும் சமாதானப்புறா
சிறகடிக்க ஆரம்பிக்கிறது
சமாதான விடியல் எங்கோ
ஓர் மூலையில்
சமாதான பேச்சுவார்த்தையோ
இன்னோர் நாட்டில்
ஓ...மனிதா! இதன்மத்தியிலும்
சமாதானம் பிறக்குமா...?

ஜெறொசினி -
உயர்தரம்- 2004
சுண்டிக்குளி மகளிர்கல்லூரி

## எப்போ விடிவு...?

சமாதானம்கேட்டால் கையைவிரிக்கிறார்கள்
நியாயத்தைக் கேட்டால் தூக்குமேடைக்கு~
அழைத்து செல்கிறார்கள்
ஏ! யுத்தம் என்ற பயங்கர வாதமே!
எம் யுகத்தை விட்டு எப்போ மறைவாய்
எம் கண்ணீரை எப்போ துடைப்பாய்.

உ. ஜென்சி சோபியா
யாழ்ப்பாணம்

## தூக்குக் கயிறும் அவர்களும்

ஏந்துவதற்கு ஒரு கை
ஏற்கமறுப்பதோ மறுகை
உன்னைப்போல தவிக்கின்றேன் நடுவிலே
எத்திசை போவது.
ஏக்கங்கள் ஆயிரம்
கழுத்தில் விழப்போவதோ கயிறு
ஏங்குகின்றேன் நான்
புறாவே
கண்களை திறந்துபார்
உன்முன்னால்
தூக்குக்கயிறும் அவர்களும்

C. அன்ரன் - தரம்-9
யா/புனித றோக்ஸ் றோ. க. ம. வி

## சமாதானம் இல்லாத கைகள்

சமாதானப் புறாவே
நீ எங்கே செல்கிறாய்
உன் சிறகுகளை நீ ஏன் அடிக்கின்றாய்
எனக்கு பதிலைச் சொல்வாயா?
சமாதானம் இல்லாத கைகள்
சமாதானம் இல்லாத மக்கள்
எங்கள் கைகள் நெருப்பில் வாடுகின்றது
நெருப்பில் புழு துடிக்கும் துடிப்பை ~ நீ
பார்த்திருப்பாய்
அடிமையாய் நாம் இருக்கின்றோம்
எங்களுக்கு அடிமைஎன்னும் பெயர்
யார் உனக்கு
தூக்கு கயிற்றை மாட்டுவது
அவர்கள்தான்.

ப. பியூலா
யாழ்ப்பாணம்.

## விடுதலையின் சிறைச்சாலை

உன்னை சிறைச்சாலையில்
அடைப்பதற்குத்தான்
விடுதலை என்னும் இனிய சொல்லில்
சிறையாக்க பார்க்கிறார்கள் அவர்கள்
நீ சுதந்திரத்தின் நினைப்பில்.
தூக்குக்கயிறு என்னும் சிறையில்
நீ அடைபடும் முன் விழித்துக்கொள்.

ம. ஸ்ரெலா
யா/ புனித றோக்ஸ். றோ. க. ம. வி.



இளங்கவிஞர்களே!

அடுத்த இதழுக்கான புதிய வயலுக்குரிய படம் தரப்படுகின்றது. சத்தியத்தின் பார்வையோடும் உள்ளத் தெளிவோடும் எழுதுங்கள். சமுதாய நேசிப்போடு மக்கள் எழுச்சிபெற எழுதுங்கள். பிரசுரிப்போம்.

'ஆத்மா'
'புதியவயல்'
இல. 1/7, மடம் வீதி, யாழ்ப்பாணம்

"கவிஞன் ஆக முடியும் என்பது உண்மையான மனிதனால் மட்டுமே.
அதனால் கவிஞன் ஆக முன்னம் உண்மையான மனிதனாக வேண்டியது அவசியம்" - பெரேஸ் -

# 2003ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம்

சில குறிப்புகள்

2003ம் ஆண்டுக்கான பட்ஜட் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதம் தொடர்கிறது. எண்பதுகளில் இருந்ததுபோல் விவாதம் அனல்பறக்க இருக்காதுவிட்டாலும் எதிர்ப்புகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருக்கும். பட்ஜட் பாராளுமன்றத்தில் வாசிக்கப்படுவதைவிட பாரிஸ் உதவி வழங்கும் கூட்டத்தில் சர்வதேச நாணய நிதியத்தையும் உலக வங்கியையும் தாஜா பண்ணுவதுதான் அரசுகளின் மிக முக்கிய கடமையாகும். நிதி வருவாயை நிச்சயப்படுத்திக்கொண்டு பழைய கடனையும் வட்டியையும் மீளளிக்கும் உத்தரவாதத்தையும் உறுதிப்படுத்தி புதிய கடனோடு வரும் சடங்குதான் இந்தக் கூட்டம். உதவி வழங்கல் எனச்சொன்னாலும் பொரும்பாலும் கடன் வழங்கலேயாகும். இம்முறை முக்கியத்துவம் பாரிஸ் கூட்டத்துக்கல்ல ஒஸ்லோ கூட்டத்துக்குத்தான். இதன் வெற்றியை நம்பித்தான் பட்ஜட் சமர்ப்பிக்கப்பட்டது. ஆளும் கட்சியும் சரி எதிர்க்கட்சியும் சரி பட்ஜட்டை விமர்சனம் செய்து உலக வங்கியின் கோபத்தை சம்பாதிக்காது.

இப்பட்ஜட் உயர்குலமயின் நிதிப்பாய்ச்சலைக் கருத்திற்கொண்டே தயாரிக்கப்பட்டது. இதில் ஏழைகளுக்கான எவ்வித சலுகையையும் எதிர்பார்க்க முடியாது. தனியார் மயமாக்கலுக்கும் வெளிநாட்டு முதலீடுகளை கவர்ந்திழுப்பதற்குமான வரவு செலவீன அறிக்கை என்ற மட்டில் பெரிய வெற்றியெனக் கொண்டாலும் மனித வளமிழப்பு அளவிட முடியாதது. மின்சாரத்தை தனியார்மயப்படுத்த முன்னோடியாக மின்சாரசபையின் உருவாக்கம், கடத்தல், விநியோகம் என பிரிக்கப்படுவது இலாபம் தரும் நோக்கம் என சொன்னாலும் இவ்வேற்பாடு தனியார் மயமாக்கலுக்கு முன்னேற்பாடாகும். இது பொதுமக்கள் மீது எவ்வித கடப்பாடும் இல்லாநிலையை உருவாக்கலாம். தனியார் மயமாகும் போது விடுதலைப்புலிகள் உட்புக வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது என இனவாதக்குரல் ஓங்கி ஒலிப்பதையும் அவதானிக்க வேண்டும்.

| | |
|---|---|
| 1. அரச செலவுகள் | உரம், கோதுமை மா, அரிசி இவைகளுக்கான மானியத்தை 1989 இல் குறைத்தல்.<br>1990 இல் இல்லாமல் ஆக்கல்<br>1991 இல் இ.போ.ச வுக்கான மானியத்தை இல்லாமற் செய்தல்.<br>புகையிரத மானியத்தை குறைத்தல். |
| 2. பொது சேவைகள் | ஒவ்வொரு வருடமும் பொதுசேவை காலியான இடங்களை நிரப்பாது விடல்.<br>1991 - 1992 இல் பொதுசேவை, பொது அதிகார சேவைகளைக் குறைத்தல்.<br>1989 இல் வழங்கல், வீடமைப்பு, காணி, சந்தைப்படுத்தல், பொருட்கள், கொள்வனவு பகுதிகளை மூடிவிடல்.<br>தொலைத் தொடர்பு சேவையை பொது கம்பனியாக்கல்.<br>தொடர்ந்து பொது நலசேவைகளை தனியார் மயமாக்கல். |
| 3. வர்த்தகம் | வெளிநாட்டவரின் இலாப பங்குகளின் இட மாற்றத்திற்கு 100% வரிச்சலுகை. |

## இலங்கையின் அமைப்புச் சீராக்கலுக்கு உலகவங்கியின் பரிந்துரை

- வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவரும் விதத்தில் ஆரம்பத்தில் வரிச்சலுகை.
- வீதிக் கட்டணங்கள் அமுல். போக்குவரத்திற்கான முதலீடு செய்தலை குறைத்தல்.
- மின்சாரம் போன்ற பொதுநலத்துறைகளை தனியார் மயமாக்கல்.
- தனியார்மயமாக்கல், மானியத்தை இல்லாமல் செய்தல், மின்சார முறையை தனியாரிடம் கையளிக்கும் விதத்தில் பகுதி பகுதியாகப் பிரித்தல்.
- கல்வி, சுகாதாரம், பிரயாணத்துறை போன்றவற்றிற்கான முதலீடுகளைக் குறைத்தல்.
- உல்லாசப் பயணத்துறையை வளர்த்தல் போன்ற திட்டங்களை முன்வைத்துள்ளது.
- இம்முறை சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தோடு அமைப்புச் சீராக்கல் ஆலோசனையை ஒப்பிட்டால் உலக வங்கியின் 'நன்நடத்தை பத்திரத்தைப் பெறும் முயற்சி' என்றே கூறலாம். •


- கிருபா -

## சந்தா பற்றிய விபரம்

வாசகர்களே!

நிதிப்பலமற்று மனிதம் ஒன்றில் மட்டும் நம்பிக்கை கொண்டு இவ்விதழை கொண்டு வருகின்றோம். உங்கள் பெரும் ஆதரவிற்கு நன்றி. இதன் தொடர் வருகை உங்கள் கரத்திலேயே இருக்கிறது. தபால் செலவு உட்பட 12 இதழ்களுக்கான கட்டணம் ரூபா 80 மட்டுமே. காசுக்கட்டளைகளை அனுப்பவேண்டிய முகவரி,

*உப தபால் கந்தோர், குருநகர் -*
*ஆத்மா*
*மனிதம் கலந்தாய்வுக் குழு*
*இல. 1/7, மடம் வீதி,*
*யாழ்ப்பாணம்.*



# கற்றுக்கொடுக்கும் மாணவர்கள்

ஆசிரியர்கள் கற்றுக்கொடுக்க மாணவர்கள் கற்கின்ற, பெறுகின்ற ஒரு திட்டமிடப்பட்ட முறைமையே கல்விச் சூழலில் குறிப்பாக பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் போன்ற முறைசார் (Formal Education) நிறுவனங்களில் நடைபெறுகின்றன என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றே. (இத்தகைய கல்வி முறை விமர்சனத்துக்குரியது என்பது வேறுவிடயம்)

ஆனால் அண்மைக்காலத்தில் நமது சூழலில் மாணவர்கள் சுயாதீனக் குழுக்களாக, பாடசாலை அமுக்கக் குழுக்களாக (pressure group) மாறி பாடசாலைகளில் தமது நலன்களுக்கு எதிராக அமையும் விடயங்கள் தொடர்பாக குரல் கொடுத்துவரும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. பாடசாலை நிர்வாகத்தையே ஆட்டம் காணவைக்கும் அளவுக்கு இத்தகைய நடவடிக்கைகள் அமைந்து வருவது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய நிலைமைகளில் பாடசாலை நிர்வாகம் இதனை "குழப்படிக் கூட்டம்" என்றும் கற்ற நமது புத்திஜீவிச் சமூகம் "தேவையில்லாத வேலை" என்றும் கல்விசார் பிரச்சினைகளுக்கு பதிலிறுக்க வேண்டிய அரச அமைப்புக்கள் கண்டும் காணாதது போல் இருந்தும் விடுகின்றன. பொதுவாக இவ்விடயங்கள் இவர்கள் பார்வையில் சிறிய விடயங்களாகவே தெரிகின்றன. யாழ்ப்பாணத்துப் பத்திரிகைகள் கூட இவைபற்றிய விடயங்களில் மௌனம் காத்து தமது பத்திரிகை தர்மத்தை அவ்வப்போது கடைப்பிடிக்கின்றன. மாணவர்கள் தமது நலன்கள் தொடர்பாக குறிப்பாக பாடசாலையின் பௌதீக வளப்பயன்பாடு (கணனி விளையாட்டு உபகரணங்கள் போன்றவை), பாடசாலையின் நற்பெயர் மற்றும் பாடசாலையின் நிதி, நிர்வாக விடயங்களில் நேர்மையற்ற தன்மை போன்றவை தொடர்பாக ஆரோக்கியமான முறையில் தெளிவு பெற நினைப்பதும் இறுதியில் அவற்றுக்காக ஒன்றுசேர்ந்து போராடுவதும் நியாயமானதே. இன்னும் சில பாடசாலைகளில் மாணவர்கள் ஆசிரிய மாற்றம், மற்றும் ஆசிரிய தேவை போன்றவற்றுக்காக அடையாள நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கின்றனர்.

இவை ஏன் எழுகின்றன? இத்தகைய ஆரோக்கிய, ஆரோக்கியமற்ற முயற்சிகளில் மாணவர்கள் ஏன் ஈடுபடுகின்றனர்? நமது பாடசாலைகளில் நிர்வாகம் பொதுவாக மாணவர்களிலிருந்து அந்நியப்பட்டு இருப்பதும் நிர்வாகம் என்பது மாணவர்களுக்குத் தேவையற்றது ஒன்று என்றும், மாணவர்கள் படித்து விட்டு சென்றால் சரி என்ற பிழையான மனோபாவங்களுமே ஆகும்.

புதிய கல்விச்சீர்திருத்தத்தில் மாணவர்களுக்கு தொழில்ரீதியான வழிகாட்டவும், ஆலோசனை வழங்கவும் தனி அலகு ஒன்று (Comprehensive Counselling and Carrer Guidance Service) உருவாக்கப்பட வேண்டும் மென்று கூறப்பட்டுள்ளது. இதுபற்றி இப்போது தான் கல்வித் திணைக்களம் மூச்சு விடத் தொடங்கியுள்ளது. மாணவர்கள் தமது பிரச்சினைகளை, பாதிப்புக்களை நம்பிக்கையுடன் பகிர பாடசாலைகளில் தனியான ஆசிரிய அமைப்பு இருக்க வேண்டும். தமது வெளிப்பாடுகளை நேர்மையுடனும், கரிசனையுடனும் செவிமடுக்க பாடசாலைச் சமூகம் தயாராக இல்லாதபோது, அவை முதலில் அனாமதேய கடிதங்களாகவும் சுவரொட்டிகளாகவும் இறுதியில் பகிரங்கமான நடவடிக்கைகளாகவும் மாறிவருவது தவிர்க்க இயலாது போகும். பிரச்சினைகளை "அடக்கிவிடலாம்" என இனியும் எமது கல்வி நிறுவனங்கள் செயற்படின் போராட்டங்களும், வெளிநடப்புக்களும் அவசிய மானதாகவும் சிலவேளை ஒரு தொற்று நோயாகவும் மாறிவிடும் அபாயம் ஏற்பட்டுவிடும்.

ந. சிவம்
மானிப்பாய்.

# சகல பிள்ளைகளுக்கும் கல்வி



நன்றி சளரம்

பிள்ளைகள் பிறக்கப் போகும் தேசத்தின் சூரியன்கள். நாளைய விடியலை பிரசவிக்கப் போகிறவர்கள். உலகிற்கு வழிகாட்டப் போகும் துருவ உடுக்கள். நாளைய உலகின் நம்பிக்கை விருட்சங்கள்.

அவர்களுக்கு கல்விக்கடலை மட்டும் பரிசளியுங்கள். அது போதும்.
நாளைய உலகு நலம் பெற்று வாழும்.

சீமான் வீட்டுப் பிள்ளை சீராய்ப் பள்ளி சென்று கற்கும். ஏழை வீட்டுப் பிள்ளையும் சீராய்ச் செல்லும். பள்ளிக்கல்ல மாட்டடிமைச் சமூகத்தில் தன்னையும் அங்கத்தவனாக்கிக் கொள்ள.

ஏனிந்த நிலை?
ஏழ்மை!
ஏழ்மையா?

பாவ மூடைகளை பண மூடைகளாய்க் கட்டி வைத்திருப்பவர்களே! நாமனைவரும் நாணிட வேண்டும்.

பலவாறு பிதற்றுகின்றோம். பெருமைப்படுகின்றோம். எண்பத்தாறு வீதத்தினர் எழுத்தறிவு பெற்றவர்களென்று மீத பதினான்கை ஏன் சிந்தியாது விட்டோம். இப்படி எத்தனை பதினான்குகள்?

ஏன்? ஏன்? சிந்தியாது விட்டோம்.

எண்பத்தறுவருக்கும் எண்ணும் எழுத்தும் எழுத்தாணிகளும் பதினால்வருக்கு பாழ்பட்டு விட்ட, இன்னும் பாழ்படப் போகிற நாளையும் ஏகாந்தமாய் சூனியமாய் விரியும் உலகமும்.

இந்த நிலையைக் களைவோம்.
அறிவுக்கடலில் அனைவரும்
அனைத்து சிறுவர் நாமும் நீந்துவோம்.
அன்புப்பூக்களை அர்ப்பணிப்போம்
அநீதிகள் அழியட்டும் அகிலத்தில் சமாதானக் காற்று வீசட்டும்.
அனைத்துப் பிள்ளைகளும் அறிவு பெற்று
மகிழ்வாய் வாழ்வோம்
மகிழ்வாய் வாழட்டும்.

ப. சேனா
ஆறுகால் மடம்.

**அன்பிற்குரிய மாணவ, மணிகளே!**

**ஆசிரியர், பெற்றோர், பெரியோர்களால் உங்களைப் பற்றிய பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. அதனால் பெரும் துன்பங்களுக்கும் துஷ்பிரயோகங் களுக்கும் உட்பட்டிருக்கிறீர்கள். இவை பற்றிய விபரங்களை பலர் எமக்கு எழுதி அனுப்பியிருந்தீர்கள். நன்றி. அவற்றை உறுதிப்படுத்தி தகுந்த அணுகுமுறைகளை மேற்கொண்டுவருகிறோம். உங்களது மன அவஸ்தைகளை தொடர்ந்தும் எமக்கு விபரமாக எழுதி அனுப்புங்கள். பிரசுரிக்கும்போது உங்களது விபரங்கள் தவிர்க்கப்பட வேண்டும் என நீங்கள் விரும்பினால் அதனை அதனையும் செவிமடுப்போம்.**

அனுப்பவேண்டிய முகவரி :
**'ஆத்மா'**
**'அக்கினிக் குஞ்சுகள்'**
**இல. 1/7, மடம் வீதி, யாழ்ப்பாணம்.**

இப்பத்திரிகை இல.1/7, மடம் வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கும் மனிதம் கலந்தாய்வுக் குழுவினரால் இல.360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்தில் நொவெம்பர்-டிசெம்பர் 2002 இல் வெளியிடப்பட்டது. 10.11.2002